
நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை-17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய ஐப்பசி * அக்டோபர்-17, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு ஏழு

பக்கம்	பயன்
3	எண்ணம்
4	ஆயுள் உறுப்பினர்
5	கலைக் கோயில் பல நிறுவிய கருணை வள்ளல்
10	அயலூர் நகரத்தார்
14	பழநிமலைக் காவடி
25	விளம்பரம் ஒரு கலை
28	திட்டம் வாழ்க
32	இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்
35	வை. சு. ச.

இலக்குமியே நீங்கா திரு

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் —வீடுகட்கு
அன்றைக்கு வந்தளங்கள் அம்மா! இலக்குமிநீ
என்றைக்கும் நீங்கா திரு.

—பாடுவார் முத்தப்ப செட்டியார்.

கற்பனையோ? கற்பனையே!

கதையில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் யாரையும் குறிப்பிடுவனவல்ல. கற்பனையே! இது கதைகள் அனைத்திற்கும் உள்ள பொது மரபு. ஆயினும் பழநிமலைக் காவடி நம் மரபினரின் பழக்க வழக்கங்களையும் உணர்ச்சிகளையும் அடியொற்றி எழுதப்பெறும் நெடுங்கதை என்பதால் அதில் வருகின்ற பெயர்களோ நிகழ்ச்சிகளோ உறுதியாக யாரையும் குறிப்பிடுவன அல்ல என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொண்டு அந் நெடுங்கதையினைப் படிக்க உங்களைப் பதினான்காம் பக்கத்திற்கு அழைக்கின்றேன்.

ஆசிரியர்.



வள்ளல் அழகப்பரைப் பற்றி



வசந்தா முத்து வீரப்பன் B. Sc. எழுதும் கட்டுரை 5ஆம் பக்கம் இடம் பெற்றுள்ளது.

உ
சிவமயம்



அருளும் பொருளும்!

அருள் இல்லார் யாதும் இல்லாரே யாவார் !

ஆனால் ஒன்று. அருளைத் தேடப் பொருளையும் தேட வேண்டும் என்ற நிலை பண்டு தொட்டே இருந்து வந்திருக்கிறது.

நம் மரபினர் முறைப்படி பொருளைத் தேடி அருளினையும் தேடியவர்கள் என்பதற்கு நாடு எங்கும் ஊர்கள் தோறும் வானோங்கி நிற்கின்ற கோபுரங்களே நல்ல சான்றுகளாகும். காலப் போக்கிற்கேற்ப அறப்பணிகளும் வேறுபடுகின்றன. இன்று கல்வி நிறுவனங்கள் எல்லாம் ஆலயங்களாக விளங்குகின்றன. கல்வி தந்தாரை வாழ்த்தி வருகின்ற இளைஞர் உலகம் வேலை தருவாரைத் தேடி அலையும் நிலையே எங்கும் காணப்படுகின்றது.

நம் மரபினரிடையே தொழில்வளம் நிறைந்த அளவில் உள்ளது. எனவே வேலை வாய்ப்புகளும் நிறைந்த அளவில் உள்ளன. எனினும் கூட நம் சமூக இளைஞர் பலர் வேலையின்றி வாடும் நிலையினைக் காண்கின்றோம். தொழில் நிறுவனங்களுக்கு உரிய நம் மரபுப் பெருமக்கள் பலர் நம் இளைஞர்களுக்கு வேலை தந்து ஆதரித்தே வருகின்றார்கள். இதனை தொழில்வளம் உடைய நம் மரபு எல்லாப் பெருமக்களும் மனமுவந்து செய்தால் பல குடும்பங்களுக்கு வாழ்வளித்தவர்கள் ஆவார்கள். வறுமை இருள் படியும் பல குடும்பங்களில் வருவாய் என்ற ஒளியினை ஏற்றி அருளினைப் பெற்றவர்கள் ஆவார்கள்.

வேலை வாய்ப்பினைப் பெறும் நம் இளைஞர்கள் அந்த வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தாம் பணி புரியும் நிறுவனங்கள் உயரவும் அதன் மூலம் தாம் உயரவும் சுருங்கச் சொன்னால் நம் மரபும் நாடும் உயரவும் அயராது பாடுபடுவார்கள் என நம்புகின்றோம்.

ஆயுள் உறுப்பினர்

ராணி மெய்யர்மை ஆச்சி
(செட்டிநாடு)
செட்டிநாடு இல்லம்
அடையாறு
சென்னை-20.

குமாரராஜா அ. மு. முத்தையா செட்டியார்
(செட்டிநாடு)
செட்டிநாடு இல்லம்
அடையாறு,
சென்னை-20.

சேலம் நகரத்தார் சங்கம்
10-444-அருணாசல ஆசாரிதெரு
சேலம்-1.

தி. மாணிக்க வாசகம் செட்டியார்
(ஆ. தெக்கூர்)
மீனாட்சி நூற்பாலை
திருப்பரன்குன்றம் குன்றம்சாலை
மதுரை.

எம். எஸ். எஸ். எஸ் சொக்க லிங்கம் செட்டியார்
(பள்ளத்தூர்)
சொக்கலிங்கம் எஸ்டேட்
டேவர் ஷோலா அஞ்சல்
நீலகிரி.

ஏ. சி. முத்தையா
(செட்டிநாடு)
அடையாறு இல்லம்
கிண்டி,
சென்னை--5.

ஏ. ஏ. எல். அழகப்பசெட்டியார்
தபால் பெட்டி எண்-6,
காரைக்குடி.

எம். தெய்வராயன்
(காரைக்குடி)
7, டாக்டர் நாயர் ரோடு
தியாகராய நகர்
சென்னை-17.

அ. மு. சுப. அடைக்கலவன்
(விரையாச்சிலை)
எஸ்ஸோ டீலர்
மார்த்தாண்டபுரம்
புதுக்கோட்டை.

எம்.பி.எம். பழநியப்பசெட்டியார்
(கொப்பனாபட்டி)
5 ரட்லண்ட்கேட் முதல் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை-6.

கலைக்கோயில் பல நிறுவிய கருணை வள்ளல்

குமாரி M. வசந்தா முத்துவீரப்பா B. Sc.
டாக்டர் அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி.

(என் அறிவுக்கண்ணைத் திறந்த வள்ளலுக்கு அஞ்சலி செலுத்தும் முறையில் நன்றிக் காணிக்கையாக இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.)

சங்கத்தமிழ் ஏடுகளைப் புரட்டினால், முல்லைக்குத் தேரீந்த பாரியும், மயிலுக்குச் சால்வையளித்த பேகனும், தன் தலையையும் தர முன்வந்த குமணனும் அழியாத புகழுடன் காட்சி அளிக்கின்றார்கள் அல்லவா? அத்தகைய வரலாற்றுப் புகழ் மிக்க வள்ளல்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் நமது பெருமதிப்பிற்குரிய டாக்டர் வள்ளல் அழகப்பர் ஆவார்.

அவர் ஓர் அபூர்வப் பிறவி. ஆழியிடைப் பிறவா அமுதம். மலையிடைப் பிறவா மாமணி. தெள்ளுதமிழ் அன்னை ஈன்ற அருந்தவப் புதல்வர்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்ற வள்ளுவத்தாதையின் வாய்மொழியினை வாழ்வில் கைக்கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வாகைசூடி வானுறையும் தெய்வமாகத் திகழ்ந்த பலருள் முன்னணியில் வைத்துப் போற்றத்தக்க சீரும், சிறப்பும் பெற்றவர் நமது வள்ளல் அழகப்பர். வியனுலகு வியக்க வான்கொடைகள் வழங்கி அழியாப் புகழ் பெற்ற மாண்புடையோன்.

செட்டிநாட்டில் காரைக்குடிக்கு அருகில் உள்ள மாண்புறு கோட்டையூர் என்னும் பதியில் இராமநாதன் செட்டியார் என்னும் மூதறிஞர், உமையாள் என்னும் குணவதியுடன் இருந்தோம்பி இல்வாழ்வு வாழ்ந்து வந்தார். அன்னை தன் அருந்தவத்தால், வணிகர் பெரும் குலம் விளங்க 6–4–1909ஆம் திகதி அருந்தவப் புதல்வனாக வள்ளல் அழகப்பர் தோன்றினார். வள்ளல் அவர்கள் தமது தொடக்கக் கல்வியை உள்ளூரில் ஓர் திண்ணைப்பள்ளியில் கற்று, பின்பு காரைமாநகரில் உள்ள எஸ். எம். எஸ். உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றார். பத்தாவது பயின்று கொண்டிருக்கும் பொழுது தந்தையார் கட்டளைக்கேற்ப மலேயா செல்லப் புறப்பட்டார். ஆங்கிலக் கல்வியின்பால் அவருக்கிருந்த ஆசையை அறிந்த அறக்கடவுள் அன்னாரின் விருப்பம் நிறைவேற அருள்கூர்ந்து நாகப்பட்டினத்துடன் அவரது மலேயா பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். இவர் சிறு வயதிலேயே உயர்ந்த கொள்கைகளை உடையவராய், நீதி தவறாத நெறிமுறையில் நடந்து வந்தார். இதற்கு இவருடைய தந்தையாரின் நல்லொழுக்கமே காரணமாயிருந்தது.

பின்பு தந்தையின் அனுமதிபெற்று மீண்டும் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்து 1930ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் 21ஆம் வயதில் எம். ஏ. பட்டம் பெற்றார். நகரத்தார் சமூகத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற முதல் மனிதர் வள்ளல் அழகப்பரேயாவார். அதன்பின் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். அங்கு கல்லூரியில் படித்த நேரம் போக எஞ்சிய நேரத்தில் "இலண்டன் சார்ட்டர்டு வங்கியில்" பணிபுரிந்து உழைப்பின் பெருமையை உணர உலக மாணவருக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். ஓய்வு நேரங் களில் விமானம் ஓட்டும் கலையையும் திறமையுடன் கற்றுத் தேர்ந்து 1933ஆம் ஆண்டு தாயகம் திரும்பினார்.

அப்போது அழகப்பருக்குப் பக்குவம் கெழுமிய வயது—பாகுமொழி பேசும் பருவம். இளமைப் பொலிவும், இறைவனிடம் நீங்காப் பக்தியும் கொண்ட அழகப்பருக்கும் வள்ளியம்மை ஆச்சி என்ற மங்கையர் திலகத்திற்கும் திருமணம் நடைபெற்றது. வள்ளல் அவர்கள் மங்கலமாய மனைமாட்சியைக் கண்டு, அதன் நன்கலமாய் நன்மகவுப் பேற்றையும் பெற்றார்கள். அவர்களே உமையாள் இராம நாதன் ஆவார்கள். அத்திருமகளே இன்று வள்ளல் நிறுவிய கலைக் கோயில்கள் பலவற்றையும் சீரும் சிறப்புடன் நிர்வகித்து வருகின் றார்கள். வள்ளியம்மை ஆச்சியின் மறைவிற்குப்பின் இலட்சுமி ஆச்சி என்ற குணவதியை வள்ளல் அவர்கள் மறுமணம் செய்து கொண்டார்கள்.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற வள்ளல் தொழிற்சாலைகளை நிறுவி உயர்நிலையடைய வேண்டுமென அவாக்கொண்டார். 1937ஆம் ஆண்டு கேரளாவில் புதுக்காடு என்ற ஊரில் 'அழகப்பர் டெக்ஸ் டைல்ஸ்' என்ற நூற்பாலையை நிறுவினார். முதலில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு அவதிக்குள்ளானார். அவ்வமயம் தியாகமே உருவெடுத்து வந்த அழகப்பரின் அருமைப் புதல்வியார் மேன்மைமிக்க உமையாள் ஆச்சி, தனது தாய்வழிப் பாட்டன், பாட்டிக்குத் தெரியாது, தனக் குரியதான, தனது அருமை அன்னையினுடைய விலைமதிக்க மூடியாத நகைகளைக் காலமறிந்து கொடுத்து, சரித்திரத்தில் கைகொடுத்த தெய்வமென்ற புகழுக்கு ஆளாகினார்கள். அதனைக்கொண்டு அழகப்பர் உரமுடைய நெஞ்சத்தோடும், உற்சாகத்தோடும், இடைவிடாது உழைத்துப் பெருஞ்செல்வரானார். ஒப்பற்ற தனது குலக்கொடியின் தியாக உணர்விற்கு ஆண்டவன் அளித்த பரிசாகிய மட்டற்ற செல்வத்தை நினைத்து, நினைத்து இறும்பூதெய்தினார்.

வள்ளல் அழகப்பர் 1943ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் உலகமே இதுவரை கண்டிராத—இனிமேலும் காண இயலாத வகையில் தனது அருமைப் புதல்வி உமையாள் ஆச்சிக்கும், அன்புச் சகோதரியின் அருமைப் புதல்வர் இராமநாதன் செட்டியாருக்கும் திருமணத்தைச் சிறப்புடன் நடத்தினார். அழகப்பர் தனது ஒப்பற்ற புதல்விக்குக் கொடுத்த சீதனத்தையும், அணிவித்த அணிகலன் களையும் எழுதப்புகின் ஏட்டில் அடங்கா. நவிலத் தொடங்கின் நாவிற்கடங்கா.

அழகப்பர் செல்வச்சீமானாகத் திகழ்ந்தபோதிலும், இவ்வட்டா ரத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து இன்னலுறுபவர்களின் நிலையை

எண்ணி வேதனையுற்றார். இதற்கு நல்லதோர் வழிகாண முற்பட்டார். அறக் கொடைகளிற் சிறந்ததாகிய அறிவுக்கொடையை நல்கினால், மக்கள் படித்து முன்னேற்ற மடைந்து வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஈட்டி என்றும் சீரும் சிறப்புடன் வாழ்வர் எனக் கருதி, எல்லோரும் கல்வி கற்று மேம்பட வழிவகுக்க முற்பட்டார். 1947ஆம் ஆண்டு சென்னை அடையாற்றில் பெசண்ட் அம்மையின் நூற்றாண்டு விழாவில் சொற்பெருக்காற்றிய துணை வேந்தர் பெருமைமிக்க லெட்சுமணசாமி முதலியார் அவர்கள் "நாட்டில் உள்ள பெருஞ் செல்வந்தர்கள் முன்வந்து கல்வி நிலையங்களைத் தோற்றுவித்தால், நாட்டின் முன்னேற்றம் விரைவில் ஏற்படும். மக்கள் துன்பமும் நீங்க வழி ஏற்படும்" எனக் கூறினார்.

கூட்டத்தில் இருந்த பேசும் தெய்வமாகிய அழகப்பர், "காரைக்குடியில் நான் நிறுவுகிறேன் ஒரு கல்லூரியை—அதுவும் உடனடியாக" என வீரமுழக்கம் செய்தார். கல்வியின் சிறப்பே இந்நாட்டின் சிறப்பு என்பதைக் கசடற உணர்ந்து, உணர்ந்ததைச் செயலில் நிலைநாட்ட அல்லும் பகலும் அரும்பாடு பட்டார்.

சென்னையில் கூறிவிட்டு வந்து நாற்பது நாட்கள் முடிவதற்குள்ளாகவே ஓர் ஒப்பற்ற கல்லூரியை நிறுவி நடத்திக்காட்டிய நல்லறிஞர்தான் டாக்டர் அழகப்பர். தித்திக்கும் தீந்தமிழால் தேச பக்தியை நாட்டு மக்கள் நெஞ்சிலெல்லாம் ஊட்டிய அமரகவி பாரதியார், தமிழ் நாட்டின் மானங்காத்த மாண்புமிக்க வீரர்கள் மருது சகோதரர்கள், தமிழகத்தின் கடல்களில் கப்பலோட்டிய குற்றத்திற்காக, சிறையிலே செக்கிழுத்த சிதம்பரனார் முதலிய மேதைகளையும், வீரர்களையும் தியாகிகளையும் உலகிற்களித்த பாண்டியநாடு, ஒப்பற்ற கலைக் கோயில்கள் பல நிறுவி, கல்விப்பயிர் வளர்த்த மனித குலத்தின் மணிவிளக்காகிய வள்ளல் அழகப்பரை ஈந்தது தமிழக மக்கள் செய்த தவப்பயனே என்றால் யார்தான் மறுத்துக்கூற இயலும். தன் இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்கிக் காட்டிய வள்ளலின் நற்செயல்கள் அவருக்கு உலகப்புகழைப் பெற்றுத்தந்தன.

11–8–1947ஆம் திகதியன்று காரைக்குடியில் புதியதோர் கல்லூரியைத் தொடங்கியவுடன் அழகப்பர் தன்னுடைய கனவு பலித்துவிட்டது என்று எண்ணாது, வரிசை வரிசையாகப் பல்வேறு கல்வி நிலையங்களைக் காரைக்குடியில் நிறுவி அழியாப் புகழ் பெற்றுள்ளார். அழகப்பா தொடக்கப்பள்ளி, ஆதாரப்பள்ளி, மாண்டிசோரிப்பள்ளி, மாதிரி உயர்நிலைப்பள்ளி, கலைக்கல்லூரி, பொறியியற் கல்லூரி, தொழில்நுணுக்கக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, மாபெரும் உணவு இல்லங்கள் முதலிய பல நிலையங்களை ஒன்றன்பின் ஒன்றாக சங்கிலித் தொடர்போல் உருவாக்கிக் காரைக்குடியை ஒப்பற்ற ஓர் அறிவாலயமாக மாற்றிவிட்டார். 1000 ஏக்கர் நிலப்பரப்பில் அவர் கல்வி நிலையங்களுக்கு எழுப்பியுள்ள வானளாவிய கட்டிடங்கள் தலைநிமிர்ந்து கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்கின்றன. இதனைக் கண்டு அறிஞர் முதல் வறியர்வரை, பெரியோர் முதல் சிறியோர் வரை புகழாதார் இல்லை எனக் கூறலாம். "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது'' கற்க வரும் மாணவ, மாணவிகளின் தொகை கணக்கிலடங்கா.

நாடு நலமுற, விரைந்து முன்னேற்றமடைய, மத்திய அரசினர் நாடெங்கிலும் அமைத்த பல விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்களில் ஒன்றான மத்திய மின் இரசாயன ஆராய்ச்சிக் கழகம் காரைக்குடியில் அமைய இடமும் பதினைந்து லட்சம் ரூபாயும் நல்கிய பெருமகனார் அழகப்பர். இஃது அன்னாரின் வள்ளல் தன்மையினையும் நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் அவர்கட்கு உள்ள தணியா ஆர்வத்தினையும் வெள்ளிடை மலை எனக் காட்டுகிறது.

கலைக் கோயில்கள் பல நிறுவிய கருணைவள்ளல் சேவாசதனம், தக்கர்பாபா வித்யாலயம், கொச்சி ஆஸ்பத்திரி, விவேகானந்தா கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகம் இன்னும் ஏனைய பல நிறுவனங்களுக்குச் சிறந்தமுறையில் தானாகவே மனமுவந்து நன்கொடை வழங்கியுள்ளது பாராட்டிற் குரியதாகும். இதனைக் கருதியே

"பிணமாகும் வரைக்குமவன் அள்ளிஅள்ளிப்
பிறர்வாழக் கொடுத்தானே, எப்படித்தான்
குணமிதனைப் பெற்றானோ! குடியிருந்த
கோதையவள் மணிவயிற்றின் பெருமைதானோ!''

எனக் கவிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

அவர் ஈட்டிய செல்வம் ஏராளமானது என்ற போதிலும், அது வல்ல அவருடைய புகழுக்குக் காரணம். அவர் ஈட்டிய பெருஞ் செல்வத்தை எந்த வழியில் செலவழித்தனர் என்பதில்தான் வள்ளல் அழகப்பருக்கும், ஏனைய செல்வர்களுக்குமிடையே மகத்தான வேறுபாடு உள்ளது. அவர் தனக்கென வாழாத பிறர்க்குரியாளராக மாறி, தன் செல்வத்தையெல்லாம், பிறர் வாழ்வுக்காகக் கொடுத்துக் கொடுத்துப் புகழ்பெற்ற கொடைவள்ளலாக விளங்கினார். ஈட்டவும், ஈயவும் தெரிந்த வள்ளல் அழகப்பரைப்போன்ற இன்னோர் உயிரோவியத்தை நாம் எங்கே தேடமுடியும்? எப்படிப் பெற முடியும்?

எனவேதான் வள்ளல் அழகப்பரின் மரணம், மக்களை மட்டுமல்ல, மாணவர்களை மட்டுமல்ல, கலைஞர்களை மட்டுமல்ல, எழுத்துலக மேதைகளை மட்டுமல்ல, பத்திரிகை ஆசிரியர்களை மட்டுமல்ல, தமிழகம் முழுவதையுமே கண்ணீர் வடித்துக் கலங்க வைத்து விட்டது.

கல்வியின் வளர்ச்சிக்காக அள்ளி அள்ளி வழங்கிய அருஞ் செயலில் இவருக்கு ஈடு என்று கூறத்தக்க வள்ளல் இன்னொருவர் இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்ததில்லை. தமிழகத்தில் மட்டும்தானா—இந்தியத் துணைக் கண்டத்திலேயே இருந்ததில்லை. பாடுபட்டுத் தேடிய பல கோடிக்கணக்கான ரூபாய்களையும், தான் குடியிருந்த வீட்டையும் தமிழகத்தின் கல்விச் சிறப்புக் காகவும், செழிப்புக்காகவும் கொடுத்த எட்டாவது வள்ளல் அழகப்பர்

என்பதை யாரும் மறுத்தலரிது. வள்ளலின் பெருங் கொடையைப் போற்றி, எனது வணக்கத்திற்குரிய கல்லூரி முதல்வர் டாக்டர் வ. சுப. மாணிக்கனுர் அவர்கள்

"கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுச்செல்வன்—தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன் அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு"

எனப் பாடியுள்ள கவிதை ஒவ்வொருவரின் இதயங்களிலும் அழகப்பரின் வள்ளல் தன்மையின் பெருமையை ஓய்வின்றி ஒலித்துக் கொண்டிருக்கிறது என்ருல் மிகையாகாது.

இறைப்பற்றும், மதப் பக்தியும் கொண்ட வள்ளல் அழகப்பர், பணமின்றித் தத்தளித்த கல்வி நிலையங்கள், உதவி கோரிவந்த பொது நலக் கழகங்கள், ஆதரவின்றி வேதனைப்பட்ட நூல் நிலையங்கள், படிப்பகங்கள், மாணவர்கள், இன்ன பிறருக்கும் பிறவற்றுக்கும், அள்ளி அள்ளி வழங்கிய வள்ளல் தன்மையைக் கண்டு வணக்கத்திற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அழகப்பரை பாரியாகக்கருதி, பாரிவிழா நடத்திப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். அழகப்பரின் அயரா அறச் செயலினைக் கேள்வியுற்று உலகம் போற்றும் உத்தமராகிய, அன்புத் தெய்வமாக விளங்கிய காந்தியடிகள் அழகப்பரை அன்போடு அணைத்துப் பாராட்டியுள்ளார்கள் என்ருல் அழகப்பரின் வள்ளல் தன்மைக்கு ஈடுஇணை யாரையும் ஒப்பிட்டுக்கூற இயலாது.

நாட்டு நலம் கருதி "அறம், பொருள், இன்பம் புறங்கடை நல்லிசையும் கொடுக்கும் சிற்றுயிர்க்கு உற்ற துணையாம்" கல்விக்காக அள்ளி, அள்ளி வழங்கிய தென்னகம் பெற்ற பொன் ஒளி, ஓடி ஒளிந்து விட்டதென்ருலும், அவருடைய புகழ் என்றென்றும் அழியாது. கல்வி உலகில் வள்ளல் அழகப்பர் என்கின்ற பெயர் என்றென்றும் ஒளி வீசித் திகழ்ந்தபடி இருக்கும். அவர் வளர்த்து விட்ட இளம் தலைமுறையினர் இதயங்களில் அவர் காலத்தால் மறையாத, கவின்பெரும் சிலையாக காட்சி அளிக்கிருர்! எட்டாவது வள்ளலாகிய டாக்டர் அழகப்பரைத் தமிழுலகம் என்றும் பாராட்டி இன்புறும் என்பதில் ஐயமில்லை. அழகப்பர் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக விருந்தாளுலும், அழியாப் புகழுடம்புடன் இறவாமல் என்றும் வாழ்கின்ருர்.

வள்ளலின் அருந்தவப் புதல்வியாகிய பெருமதிப்பிற்குரிய உமையாள் இராமநாதன் அவர்கள் இப்பொழுது அவர் நிறுவிய கல்லூரிகளின் தலைவராக இருந்து, தந்தையார் விட்டுச் சென்ற கல்விப் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகின்ருர்கள். அவரது அறப்பணிகள் சீரும் சிறப்புடன் திகழச் செந்தமிழ் கடவுள் திருமுருகன் திருவடி தொழுவோமாக!

வாழ்க அழகப்பர் புகழ்!
வளர்க அவரது கலைக்கோயில்கள்!!

அயலூர் நகரத்தார்

வாணிபத்தையே தலையாய தொழிலாகக் கொண்டவர்கள் நம் மரபினர். எனவேதான் வணிகர் என்ற பெயருக்கு உரியவர்கள் ஆனோம்.

கடல்கடந்து வாணிபம் செய்வது என்பது உலகம் தோன்றிய காலம் முதலே பெருமைக்கும் பெருமிதத்திற்கும் உரியதாக விளங்கி வந்திருக்கிறது.

அந்தப் பெருமைக்கும் பெருமிதத்திற்கும் உரியவர்கள் நாம் என்றால் மிகை ஆகுமோ?

திரைகடல் தாண்டித் திரவியம் தேடி நாம் சிறந்ததுபோல அந்நாடுகளையும் கொடுக்கல் வாங்கல் தொழில் மூலம் சிறக்கச் செய்தோம்—அன்றைய வட்டிக் கடை முறையின் வளர்ச்சிதான் இன்றைய வங்கித் தொழில்.

காலப்போக்கில் நாட்டு நிலைகள் மாறுபட்டன. மக்கள் மன நிலைகள் வேறுபட்டன. அதனால் நம் மரபினர் வெளிநாடுகளில் தொழில் புரிவது இயலாதது ஆயிற்று.

அத்தகைய சூழ்நிலையில் தலைமை இடம் வகிக்கத்தக்க பெருமையினைப் பர்மா நாடு பெற்றது என்று கூறலாம்.

வெளிநாடுகளில் தொழில் செய்தவர்களும் தொழிலுக்குத் துணை நின்றவர்களும் பட்ட துயரங்கள் சோகம் மிகுந்த சோதனைக் கதைகள்.

அத்தகைய சோதனைக்கு இலக்கானவர்களில் வ. பழநியப்ப செட்டியார் அவர்கள் ஒருவர் ஆவார்கள்.

அவர்கள் கடியாபட்டியைச் சேர்ந்தவர்கள். சிறப்புமிக்க பி. கு. பி. சு. குடும்பத்தில் பிறந்தவர்கள்.

அவர்கள் முதன்முதலில் பர்மா நாட்டிற்குச் சென்றது 1925–ஆம் ஆண்டில் ஆகும்.

இரங்கூன் சா. ராம. மு. சித. மு. கடையிலும் மற்றும் பல கடைகளிலும் மேலாளராகப் பணி புரிந்த அவர்கள் 1966ல் தாயகம் திரும்ப முயன்றபோது வருமான

வரி கிளியரன்ஸ் கிடைக்காத தால் அவர்கள் பர்மாவிலேயே தாமதிக்க நேர்ந்தது.

அந்த நிலையில் ராணுவப் புரட்சி அரசு இவர்கள் மீது 19-12-67ல் குற்றங்களைச் சுமத்தி அழைத்துச் சென்று எந்தக் குற்றத்தையும் நிரூபிக்க இயலாது, மூன்று திங்கள்களுக்குள் தாயகம் திரும்ப வேண்டும் என்ற உறுதிமொழியுடன் 18-12-68ல் விடுவித்தது. பல்வேறு அலுவலகங்களிலும் ஏற்பட்ட தாமதங்களுக்கு இலக்காகிக் கடைசியாக 26-4-69ல் இவர்கள் தாயகம் வந்து சேர்ந்துள்ளார்கள்.

திரு. வ. பழநியப்ப செட்டியார் அவர்கள் 1950ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் பர்மா நாட்டுக் கோட்டை செட்டியார்கள் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியுள்ளார்கள். 1952ஆம் ஆண்டு முதல் பர்மா நாட்டுக் கோட்டை செட்டியார் கோயில்களின் தரும பரிபாலன சபையின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்கள். கம்பை கல்விக் கழகத்தின் செயலாளராக இருந்து அதனை நடத்த முடியாத சூழ்நிலை வந்தபோது, விற்று அப்பணத்தினைப் பெருக்கி நம் மரபுப் பிள்ளைகளின் கல்விக்குப் பண உதவி செய்வதற்குப் பெருந்துணை புரிந்திருக்கிறார்கள்.

இன்று அவர்கள் தாயகத்தில் உள்ளார்கள் என்றாலும் நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்குமேல் பர்மா நாட்டுத் தொடர்பு கொண்டு வாழ்ந்த அவர்களைப் பற்றிய செய்திகளை அயலூர் நகரத்தார் பகுதியிலேயே பெருமையுடன் வெளியிடுகின்றோம்.

ராணுவப் புரட்சி அரசினரால் குற்றவாளியாக்கப்பட்டு அழைத்துச் சென்றபோது அவர்கள் பட்ட துயரங்களைச் சுவையாகச் சிந்து நடையில் பாட்டாகத் தந்துள்ளார்கள். அதனை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

அன்பர்களே சேதி கேளுங்கள்
எங்களை
அறுபத்தேழு டிசம்பர்
இறுதியிலே
பிலவங்க மார்கழி நாலாம் நாள்
அரசாங்க அதிகாரி சிலர் எங்கள்
விட்டுக்குமே வந்து பலசோதனை
செய்து
எமது இருப்புத் தொகையுடன்
கணக்குகளை எடுத்துக்
கொண்டே
எம்மைக் காரிலே அழைத்துச்
சென்றார்கள்
ஊவிசாரா எனும் வீதியைச் சிறிது
கடந்ததுமே எங்கள் கண்களை
கட்டியபின் மிங்கலாடன் என்ற
ஊருக்கு அழைத்துமே போய்
கண்கட்டை அவிழ்த்துவிட்டு
அங்கு
நடத்தியவிதம் கேளீர்
அன்பர்களே,
தலைவாசல் அதிகாரி, எங்கள்
பணம்,
பாஸ்போர்ட்டை வாங்கிக்
கொண்டபின்
எமக்கு முக்காடுமே போட்டு
அங்கு
தனித்தனி யாயுள்ள அறை
களுக்குக்

கொண்டு போய்ச் சேர்த்த பின்பு
முக்காடை அகற்றிவிட்டார்,
அங்கே
அறைதனில் படுக்கைக் கட்டில்
ஒன்றும்
குடிநீருக்காகப் பானை ஒன்றும்
வைத்திருந்ததையும் கண்டோம்
மறுநாள் முதல் மூன்றுநாள்
முள் என்று சொல்லத்தக்க
நெல் நிறைந்த சோற்றை
கோருவைச் சட்டியிலே தந்தார்
விதி என்று எண்ணி
வேதனை மிகப் பட்டோம்—
இப்படி
நாள் மூன்று கடந்துசென்றதும்,
மறுபடி
முக்காடு போட்டெம்மை
அழைத்து
இரக்கமற்ற அரக்கனிடம்
இட்டுமே சென்று
அவரும் உண்மைகளைச்
சொல்லுமாறு
உரைத்திட்டார். இன்றேல்
நாய்படுந்
துன்பந்தான் உங்களுக்கென்றுர்.
அதன்பிறகு எங்களைக் கூட்டியே
சென்றுமே விசாரணை செய்த
போது
நேர்ந்த துன்பத்தையும் துயரத்
தையும்
என் னென்று ரைப்போம் அவர்
செய்த கொடுமையோ கணக்கி
லடங்கா
அவற்றைச் சொல்லியும்மாளாது,
அதன்பின் மற்றுமோர் விசால
மான
இடத்துக்குமே எம்மை அனுப்
புவதாய்
சொன்னபின் எல்லோரையும்
ஒருகாரிலே
ஏற்றியே செல்லும்போது ஒருவர்
கையுடன்
மற்றவர் கையையுமே பிணைத்து
விட்டார்கள்
பின்எம்மை இன்சீன் சிறைக்
கூடம்
கொண்டுமே போய்ச் சேர்த்
தார்கள்.

படுப்பதற்கு மூங்கில்
பாயொன்றும்
கதம்பை யாலான தலையணையும்
போர்த்தப் போர்வை ஒன்றும்
விரிப்புத் துணி ஒன்றும் எமக்கு
அளித்தே உறங்கச் செய்தார்கள்
இக்கதிக்கு ஆளான நம்மவர்
நாங்கள்
ஒன்பது பேரினிலே எழுவர்
ஓரிடமும்
இருவர் வேறிடத்தும் இருக்கவே
நேர்ந்ததையா
காலையில் எழுந்ததுமே மற்றவரும்
யாமும் கடவுளைத் தொழுது
துதித்திடுவோம்
காலைக்கடன் யாவும் முடித்த
வுடன்
கஞ்சியும் தந்தார்கள், மறுபடி
மணியும்
பத்து ஆனதுமே முற்பகலுண
வாக
நெல்லுமிகக் கலந்த சிவப்புநிறச்
சோறுடன் கடலைப் பருப்பில்
செய்த
சாம்பாருந் தருவார்கள், பின்பு
மாலை மணி மூன்று ஆனவுடன்
இரவு உணவாகக் கீரைச்சாறும்
அதேவகைச்சோறும்தருவார்கள்
வேறு புகலின்றியே உண்ண
லானேம்
நாளும் குளிப்பதற்கோ தண்ணீர்
மரவாளியால் ஆறு எண்ணித்
தருவார்
அரைகுறைக் குளியலுடன்
நாங்கள்
மனத்தையும் ஒருவாறு தேற்றிக்
கொண்டோம்
படுக்கைக்கும் இருக்கைக்கும்
தந்த
இடமோ பதினெட்டு அங்குலமே
அதில்
படுத்துப் புரளவோ முடியாது
இப்படிப்
பன்னிரண்டு மாதம் சிறைவாசம்
பட்டுமே தொலைத்தோம்
பரிதவித்து,
பின்னர் அரனருளாலே எங்கள்

விடுதலையும் அறுபத்தெட்டு டிசம்பர்
பதினெட்டுத் தேதியதில் அதிகாரி
ஒருவர் வந்தெம்மை விடுதலை செய்யப்
போகின்ற செய்தியை உரைத் திட்டார்
கேட்டதும் மகிழ்ச்சி பொங்கியதே
அதன்பின் எம்மைக் காரிலேயே
ஏறவும் ஆணையிட்டார், ஏற்றியே
எங்களை விடுசேர்த்தார், சேர்ந் தோம்
மகிழ்ச்சியாக, ஆண்டவன் அருளை நினைந்தே
வந்தனையும் செய்து வாழ்த்தி னோம் மிக
மனமகிழ்வால். எனினும் எங்கள் வாசமோ
பர்மாவில் இதுவே கடைசியாகும்

மற்றவர் போலவே தாங்களும் பொருளைத்
தேடவந்த பர்மியத் திரு நாட்டில்
இருநூறு ஆண்டுகளாய் வாழ்ந்த எம்
இனத்தவர் நலமுற்றூர் என்றாலும்
காலச் சுழலால் இன்று நாங்கள் பட்ட
கஷ்ட நஷ்டமோ சொல்லுந் தரமன்று
அகதிகள் போலவே நாங்கள் சொந்த
நாட்டுக்குத் திரும்பவும் நேர்ந் ததே கண்டபலன்
இதுதான் எங்கள் சிறைவாசக் கதையாகும்.
சரணம் சரணம் ஐயா சண்முக நாதா
நல்லருள் புரிந்திடுவாய் வள்ளி மணாளா.

நகரத்தார் மாணவ, மாணவிகளுக்குத் திரும்பப்பெறும் உதவித்தொகையளித்தல்!

சென்ற 5—10—69 நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம், சங்கத் துணைத் தலைவரும் மகாலெட்சுமி நூற்பாலை அதிபருமான திரு. லெ. அழகு சுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் திரும்பப்பெறும் உதவித்தொகை கேட்டு விண்ணப் பித்து வந்துள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்து, பொறியியல் படிப்பில் மூவருக்கும், B.Sc. படிப்பில் பதின்மருக்கும், M.A. படிப்பில் ஒருவருக்கும், பாலிடெக்னிக்கில் ஒருவருக்கும், C. A. படிப்பில் ஒருவருக்கும், வித்துவான் படிப்பில் ஒருவருக்கும் ஆக 17 மாணவ மாணவிகளுக்குத் திரும்பப்பெறும் உதவித் தொகையாக ரூ. 13,600 வழங்குவதென்றும், மற்றும் P.U.C., S.S.L.C. வகுப்புகளில் பயிலும் பதினொரு பேர்களுக்குப் புத்தகச் செலவுக்காக ரூ. 50/- விதம் மொத்தம் 5,550/- மட்டும் கொடுப்பதென்றும் மற்றும் பல தீர்மானங் களும் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றன.


பழனிமலைக் காவடி
புலவர் நாகசண்முகம்

1. திருமுருகா!

ஒலிக்குத்தான் எத்தனை மகிமை!

ஓசையாய் எழுந்து உலகை யெல்லாம் ஆட்கொள்ளும் ஒலி மட்டும் பிறவாதிருந்தால் இந்த உலகம் ஊமை உலகமாக அல்லவா இருந்திருக்கும்!

உலகம் என்ற பெரு உடலுக்கு உயிர்ப்பொருளாக விளங்குவது ஒலி.

அதனுல்தான் உண்மையாய், உயர்வாய், புகழாய், வாழ்வாய், வளமாய், நலமாய், அருளாய், அன்பாய், பண்பாய், பாச வெள்ளமாய் விளங்குகின்ற இறைவனை ஒலி வடிவமாக, நாத வெள்ளமாகக் கண்டு நம் முன்னேர்கள் போற்றிப் புகழ்ந்து ஏற்றித் துதித்திருக்கிருர்கள்.

முருகா என்ற ஒலியில்தான் எத்தனை உருக்கம்! எவ்வளவு கனிவு! சொல்ல முடியாத சக்தியல்லவா அந்தச் சொல்லிலே இரண்டறக் கலந்து கிடக்கிறது.

ஆனுல் ஒன்று! சொல்லுவார் சொல்லெல்லாம் சொல் ஆகுமோ? கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமோ? ஒலியெல்லாம் உருக்கத்தின் வடிவாகுமோ?

ஆகாது. காற்றெல்லாம் தென்றல் இல்லை. புயலும் இருக்கிறது!

அருளைப் புகுத்தி அன்பைக் குழைத்து, 'முருகா' என்று அழைக்கின்ற பண்பு, பக்தி உலகில் எல்லார்க்கும் உரியதாக இருக்க முடியாதன்ரே?

அதோ அங்கே அழகோடும் வனப்போடும் இரட்டை மாடி வீடு இருக்கிற இடத்தில் ஒரு காலத்தில் நாட்டு ஓடு போட்ட வீடு இருந்தது. பின்னர், அது சீமை ஓட்டு வீடாக உருப்பெற்றது. அதன் பின்னர் தான் மாடி வீட்டுக் கட்டிடமாக மாறியது.

பாத்திரம் எதுவாக இருந்தால் என்ன? பால், பால் தான்! பக்குவப்பட்டவர்களுடைய உள்ளமும் அப்படிப் பட்டதுதான்.

செட்டிநாட்டில் ஒவ்வோர் ஊரிலும் விதவிதமான பட்டப் பெயர்களைக் காணலாம். அந்த ஊரார் அந்த வீட்டாருக்கு இட்ட பெயர் மெய்யஞ் செட்டி வீடு என்பது.

மூன்று தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்த, அந்த வீட்டுப் பெரியவர் ஒருவர் ஒரு பாகப் பிரிவினை வழக்கில் வசதி உள்ளவர் ஒருவருக்குச் சாதகமாகச் சாட்சி சொன்னுல் ஒரு லட்ச ரூபாய் அளவு அவருக்குக் கொடுப்பதாகச் செல்வந்தருக்குச் சார்பானவர்கள் வந்து கூறினுர்கள். சாட்சி சொல்லும்படி வற்புறுத்தினுர்கள்.

"பொய்க்கு இவ்வளவு விலை ஏறிவிட்டது என்று எனக்குத் தெரியாது. ஆனுல் ஒன்று, நான் எந்தப் பொருளையும் கொள்முதல் செய்யாமல் விற்பதில்லை. இது என்னுல் கொள்முதல் செய்ய முடியாத பொருளாக இருக்கிறது. அதை நான் விற்ருல் திருட்டுப் பொருளை விற்ற குற்றத்திற்கு ஆளாகி விடுவேன். அதைச் செய்யும்படி இனியும் என்னை வற்புறுத்த மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்," என்று வந்தவர்களிடம் அந்தப் பெரியவர் கூறினுர்.

பெரியவர் எவ்வளவோ வற்புறுத்தியும், தாகத்திற்குக்கூட ஒன்றும் சாப்பிடாமல், வந்தவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

பெரியவர் பெயர் என்னவோ பழனியப்பச் செட்டியார்தான். ஆனால் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மெய்யன் செட்டியார் (அதாவது பொய்யே சொல்லாதவர்) என்ற பெயரைப் பெற்றார்.

அக்காலம் முதல் அக் குடும்பம் மெய்யன் செட்டி வீடு என்ற பெயரைப் பெற்றது.

பழனியப்பச் செட்டியார் நீதி தவறாதவர் என்பதோடு சிறந்த பக்திமானாகவும் விளங்கி வந்தார்கள்.

குடும்பம் என்பது வரவு செலவு, உணவு உடை, இவற்றுள் அடங்கி விடுவதில்லை. இவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்று இருக்கிறது. அதுதான் அமைதி! குடும்பத்தில் இன்றியமையாதது அது வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் அவர்கள்.

குளத்திலே நிறைந்து பயனற்ற தன்மை படிந்து கிடக்கின்ற நீர், அளவால் உயர்ந்ததாக இருக்கலாம். அளவால் சிறியதாயினும் குடத்திலே இருக்கின்ற கங்கை நீர் கோடி மடங்கு உயர்ந்தது என்பதுதான் அவர்கள் எண்ணம்.

தொடக்கத்தில் ஒன்றாக இருக்கின்ற ஆறு, பல கிளை நதிகளாகப் பிரிகின்ற பொழுது, பல பெயர்களைப் பெற்றுவிடுகின்றது அல்லவா? ஆனால் ஓர் ஆறு மட்டும் தொடக்கம் முதல் ஒரு பெயரையே பெற்று விளங்குகிறது.

குடும்பமும் ஆற்றுக்கு ஒப்பானதுதான். அண்ணன் தம்பிகள் என்ற நிலை மாறி பெரியப்பன், சிற்றப்பன் என்ற நிலை உருவாகி, அவையெல்லாம் தனித்தனிக் குடும்பங்களாகித் தனித்தனி வீடுகளாகவும் மாறி விடுகின்றன.

இந்த நிலை, பழனியப்பச் செட்டியார் குடும்பத்திற்கும் உரியதுதானே? ஆயினும் அதில் ஒரு வம்சாவளி மட்டும் மெய்யன் செட்டி வீடு என்பதை நிலை நாட்டுகிற முறையில் அமைந்துவந்தது.

அந்த வழியில் வந்தவர்தான் இராமநாதன் செட்டியார். இவர்கள், பழனியப்பச் செட்டியாருடைய கொள்ளுப் பேரர்.

பழனியப்பச் செட்டியார் சிறந்த பக்திமான் என்று நான் முன்னரே சொன்னேன். அதுமட்டும் போதுமோ? அவர் சிறந்த முருக பக்தர். எல்லாவற்றையும் விட அந்தப் பக்தியும் அந்தப் பண்பும் அவர் வழி வந்தவர்களிடம் மேலோங்கின.

மலையெல்லாம் மலையாகுமோ?
அவையெல்லாம் பழனிமலைக்கு இணையாகுமோ?
சொல்லெல்லாம் சொல்லாகுமோ?
முருகா என்ற சொல்லுக்கு இணையாகுமோ?

என்று இராமநாதன் செட்டியார் மெல்லிய குரலில் பாடத் தொடங்கினால், அவர்கள் மனைவி சீதை ஆச்சி மெல்லச் சிரித்து விடுவார்கள்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று இராமநாதன் செட்டியார் கேட்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கே

அதற்குக் காரணம் தெரியும். அவர்களுடைய குரல் அவ்வளவு இனிமையானது!

"முருகன், தீங்கு செய்வாருக்கும் நன்மையே செய்பவன். துன்பம் தருவாருக்கும் இன்பமே தருபவன். ஏனென்றால் என்னுடைய இசை சேராத குரலைத் தொடர்ந்து கேட்டுக்கூட என்றென்றும் அருள்புரிந்து வருகிறானே!" என்று அவர்கள் கூறுவார்கள்.

அவனுடைய அருளுக்கு இன்னொரு காரணமும் அவர்கள் சொல்வார்கள். "என்னுடைய குரலைக் கேட்டு முருகனால் எப்போதும் பொறுமையாக இருக்க முடியாது. சில சமயங்களிலாவது அவன் கோபம் கொள்வான். அப்பொழுதெல்லாம் உன் குரலைக் கேட்டவுடன் இரக்கம் கொண்டுவிடுகிறான். இதுதான் உண்மை," என்பார்கள்.

இராமநாதன் செட்டியார் தேவார திருவாசகம், திருப்புகழ் முதலியவற்றைப் பழுதில்லாமல் படித்தவர்கள். அதோடு சொந்தமாகவே பக்திப் பாடல்களை எழுதுகின்ற வல்லமை பெற்று விளங்கினார்கள்.

ஒருமுறை, தோட்டக்காரன் பூசைக்கு என்று ஏராளமான மலர்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

"நீராடிவிட்டு வந்த சீதை ஆச்சி இன்னைக்கு என்ன? இவ்வளவு பூ இருக்கு?" என்று கேட்டார்கள்.

"வெள்ளிக்கிழமை இல்லையா? அதனாலே நம்ம கருப்பையா பூவை விக்காம பூராவையும் கொண்டு வந்திருக்கிறான்," என்று இராமநாதன் செட்டியார் கூறினார்கள்.

சீதை ஆச்சி ஆடை புனைந்துகொண்டு வருவதற்குள் இராமநாதன் செட்டியார் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்கள்.

"என்ன யோசனை?" என்று கேட்டுக்கொண்டே சீதை ஆச்சி அங்கே வந்து சேர்ந்தார்கள்.

"இந்தப் பூக்களை விலைக்கு விக்கலாம். இதுகளை பாக்கறப்போ, விலை மதிக்க முடியாத இன்னொரு பூவைப் பத்தி எனக்கு நினைப்பு வந்தது. அதை ஒரு பாட்டாவே யோசிச்சுட்டேன், அதை எழுதித்தாரேன். இன்னிக்குப் பூசையிலே பாடு," என்று இராமநாதன் செட்டியார் கூறினார்கள்.

உடனே எழுந்து சென்று தாளையும் பேனாவையும் எடுத்தார்கள். எண்ணத்தை எழுத்தாக்கிச் சீதை ஆச்சி கையிலே கொடுத்தார்கள்.

"பாட்டு எப்படி இருக்கு?"

"நீங்க எழுதற பாட்டுக்குச் சொல்லணுமா?"

"புருஷன் எழுதினதை நீ ஒசத்தியாத்தான் சொல்லுவே."

"அப்படியில்லே. நீங்க எதை எழுதினாலும் உசத்தியாத்தான் எழுதுவிங்க. அதிலேயும் ஒசந்தவரை, முருகனைப் பத்தி எழுதியிருக்கீங்க. சாதாரணமா இருக்குமா?" என்று கூறி இளம் புன்னகையை உதிர்த்த சீதை ஆச்சி, பூ நிறைந்த ஓலைப் பெட்டியை எடுத்துக் கொண்டு பூசை அறையை அடைந்தார்கள்.

இராமநாதன் செட்டியார், சீதை ஆச்சியைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

உலகத்தில் ஒன்று சிறப்படைகிறது என்றல் நிச்சயமாக அதற்கு, தக்க முறையில் உயர்ந்த சூழ்நிலை அமைந்திருக்கும். அமைந்திருக்கும் என்பதை விட தக்கவர்கள் அதை அமைத்திருப்பார்கள் என்பதே பொருந்தும்.

இராமநாதன் செட்டியார் வீட்டுப் பூசை அறைக்கு இது மிகவும் பொருத்தமுடையதாகும்.

உடலில் மிகச் சிறிய இடத்தையே கண் பெற்றுள்ளது. ஆனல், அதற்கு எல்லையற்ற பெருமை இருக்கிறது. அதைப் போலத்தான் இராமநாதன் செட்டியாரின் பெரிய வீட்டிலுள்ள சிறிய பூசை அறை ஈடு இணையற்றதாக விளங்கியது.

பழனிமலைவேலன் தன் பண்டாரக் கோலத்தை நீக்கிவிட்டு, வள்ளியோடும் தெய்வயானையோடும் வளமாக இருக்கின்ற கோலம் அங்கு படமாக உருப்பெற்றிருந்தது. அதுமட்டுமோ? அப்படத்தின் வலப்புறத்திலே வள்ளிமயில் வேலன் வண்ணமயில் வேலனாகக் கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற பாலனாக விளங்குகின்ற படம் இடம்பெற்றிருந்தது. இடப்புறத்திலே ஆறுபடை வீடுகளும் அழகுபெற அமைந்திருந்த படம் விளங்கியது. படங்களுக்கு முன்னே பளபளக்கும் வெண் பளிங்குக் கல்லில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதன்மீது வெள்ளியாலான விபூதித் தட்டு, விளக்கு, மணி, உருத்திராக்கம் நிறைந்த சம்பட்டம், தீபக்கால் முதலியன விளங்கின. அவற்றிற்கு அருகில் இறைவன் புகழ்பாடும் தேவார திருவாசகங்கள், குமரன் புகழ்பாடும் திருப்புகழ், திருமுருகாற்றுப் படை, கந்தர் சஷ்டி கவசம் முதலிய நூல்கள் விளங்கின.

மேடைக்கு முன்னல் எதிர் எதிரே இரத்தினக் கம்பளத்தாலான இரண்டு தடுக்குகள் போடப்பட்டிருந்தன. தரையெங்கும் வெண்பளிங்குக் கற்கள் பாவப்பட்டிருந்தன. சுவர்கள் மிக நல்ல முறையில் வெள்ளை வைக்கப்பட்டிருந்தன.

சுருங்கச் சொன்னல் சிவபெருமானுக்குச் சொந்தமான பனிமலையைத் திருமுருகன் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு விட்டானே என்று எண்ணும்படியாக அந்தச் சிறு இடம் வெண்மையும் தூய்மையும் குளிர்ச்சியும் பெற்று விளங்கியது.

பூசை அறையை அடைந்த சீதை ஆச்சி, மலர்களைப் பளிங்கு மேடைமீதிருந்த வெள்ளித் தாம்பாளத்தில் அள்ளி வைத்துவிட்டு, விளக்கை ஏற்றத் தொடங்கினர்கள்.

இதற்கிடையே, இராமநாதன் செட்டியார் அங்கு வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த தடுக்கு ஒன்றில் அவர்கள் அமர்ந்தார்கள். மற்ருெரு தடுக்கில் சீதை ஆச்சி அமர்ந்தார்கள்.

மேடைமீதிருந்த மலர்களை ஒன்ருென்ருய் எடுத்துத் திருமுருகன் பாதமலர்களின் மீது தூவியபடியே செட்டியார் அவர்கள் திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்தார்கள்.

அது முடிந்ததும் தம் எதிரே பக்தி சிரத்தையோடு இருந்த சீதை ஆச்சியைப் பார்த்துத் தாம் எழுதிய பாடலைப் பாடும்படி கூறினர்கள்.

தமது கையில் பத்திரமாக வைத்திருந்த பாட்டெழுதிய தாளைப் பார்த்தபடியே சீதை ஆச்சி உருக்கத்

தோடு பாடினர்கள்.

"ஆயிரம் மலர்எடுத்தேன்—முருகா
உன் அழகுமலர்ப் பாதமதில்
அத்தனையும் நான்படைத்தேன்!
கோடி மலர் எடுத்து
குகனே எனக்கூவி
ஆடிநான் நின்ருலும்—உன்ஓர்
அருள்மலருக்கு இணையில்லை!
துன்பம் எனும்முள்தேடி,
துவண்டிருக்கும் உலகமதில்
இன்பமலர் ஆனவனே
எங்களைநீ காத்திடுவாய்!
சந்தனக் காப்போடு வந்து
சங்கடங்கள் தீர்த்திடுவாய்!
விபூதிக் காப்போடு
வீட்டில் என்றும் துணையிருப்பாய்!
மலைமீது குடியிருப்பாய்—எங்கள்
மனமீதும் வீற்றிருப்பாய்!
துயர்தீர்க்க வந்திடுவாய்
தூயவனே திருமுருகா!"

சீதை ஆச்சி இந்தப் பாடலைப் பாடியபோது பழனி மலையிலிருந்து முருகன் பச்சைக் குழந்தையாக அங்கே வந்து நடை பயில்வது போன்ற பிரமையே இராமநாதன் செட்டியாருக்கு ஏற்பட்டது.

2. மாமக்காரர்

'மலையெல்லாம் பழனி மலைக்கு இணையாவதில்லை,' என இராமநாதன் செட்டியார் பாடுவார்கள் என்று பார்த்தோம் அல்லவா? அதுபோல, எல்லாருடைய வாழ்க்கையும் எடுத்துக்காட்டான வாழ்க்கையாக அமைவதில்லை. ஆனால், இராமநாதன் செட்டியார் அவர்களுடைய வாழ்க்கை அத்தகைய வாழ்க்கையாக அமைந்தது.

மூன்று தலைமுறைக்கு மேலாக முருகனுக்கு அடிமைப்பட்ட குடும்பத்தில் முருகப்பன், குமரப்பன், பழனியப்பன் என்று பெயர் வைத்துக்கொண்டு வந்த குடும்பத்தில் இவருக்கு மட்டும் இராமநாதன் என்று எப்படிப் பெயர் வந்தது?

இராமநாதன் செட்டியார் அவர்களுடைய தகப்பனர் குமரப்பச் செட்டியார் அவர்களுக்கு நீண்ட நாள் குழந்தையே இல்லை. எனவே, அவர்கள் இராமேஸ்வரம் போய் வந்த பிறகு குழந்தைப் பேறு கிடைத்ததால் அந்தக் குழந்தைக்கு இராமநாதன் என்று பெயர் வைத்தார்கள்.

இதில் வியப்பில்லை! இராமநாதனுக்கு ஏற்ற சீதையும் பிறந்திருந்ததுதான் பெரும் வியப்பு!

இராமநாதன் செட்டியார் காவிரிநீர் போன்றவர்கள் என்ருல், சீதை ஆச்சி அதன் புனிதமாக – புண்ணியமாக – விளங்கினர்கள்.

அவர்களுக்குத் திருமணம் ஆனது முதலே அமைதியோடும் அடக்கத்தோடும் வாழ்க்கையைத் தொடங்கி

ஞர்கள். இருவரும் நற்குணம் மிகுந்தவர்களாக விளங்கியதால் அவர்களுடைய உள்ளங்கள் ஒன்ருகிவிட்டன. எனவே, இடையில் வேறு யாருக்குமே வேலையில்லாமல் போய்விட்டது.

குடும்பம் என்ற ஆலயத்தில், சீதை ஆச்சி தீபமாக விளங்கிஞர்கள். இராமநாதன் செட்டியார் தெய்வமாக விளங்கிஞர்கள்.

ஆலயத்துக்கு வருவோர்களெல்லாம் ஆண்டவன் மேல் அன்பு மேலிட்டுப் பக்தி பெருகி வருகிருர்கள் என்று எண்ண முடியுமா?

நல்லவர்களைப் பார்த்து எல்லோரும் வாழ்த்துவார்கள் என்று எப்படிக் கூற முடியும்? அன்பு தோய்ந்த இராமநாதன் செட்டியார்—சீதை ஆச்சி குடும்ப வாழ்க்கையைப் பார்த்துப் பலர் பொருமைதான் அடைந்தார்கள்.

சலனமற்று ஓடுகின்ற ஆற்றுநீர் ஆங்காங்கே தேக்கமாகக் கிடக்கின்ற கற்களைப் பற்றிக் கவலை கொள்ளாது தன் போக்கிலே செல்வது போல், இராமநாதன் செட்டியார் தம்பதிகளும் திடமனத்துடன் தம் வழியில் வாழ்ந்து வந்தார்கள்.

கண்கள் இரண்டாகவும் ஆனல் பார்வை ஒன்ருகவும் இருப்பது போல, உடலால் இருவராகவும் உணர்வால் ஒருவராகவும் விளங்கிய அவர்களுக்குக் கண்களைப் போல இரண்டே பிள்ளைகள்.

'ஆஸ்திக்கு ஒன்று; ஆசைக்கு ஒன்று,' என்பார்கள். அதற்கு ஏற்ருற் போல ஓர் ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை.

பையன் பெயர் வேலாயுதம். பெண் பெயர் கல்யாணி. இருவரையும் இராமநாதன் செட்டியார் தம்பதிகள் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார்கள்; நன்கு படிக்க வைத்தார்கள்.

வேலாயுதம் பி. காம். முதலாண்டு பயின்றுகொண்டிருந்த பொழுது கல்யாணி பி. யு. சி. படித்துக் கொண்டிருந்தாள்.

பெண்ணிற்குக் காலத்தால் திருமணத்தைச் செய்து விடுவது நல்லது என்று இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும் நினைத்தார்கள்.

அவர்களுக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் அருணுசலம் செட்டியார் என்பவர்கள். அறுபதைத் தாண்டிய வயதும், நிறைந்த அனுபவமும் உள்ள அவர்களை எல்லாரும் அருணுசல ஐயா என்றுதான் அழைப்பார்கள். மிகவும் முக்கியமானவர்களுக்குத் திருமணப் பேச்சுக்களில் அவர்கள் துணையாக இருப்பார்கள்.

அவர்களிடத்தில் இராமநாதன் செட்டியாருக்கு நல்ல பற்று உண்டு. ஐயாவிற்கும் இராமநாதன் செட்டியாரிடத்தில் நல்ல பாசம் உண்டு. எனவே, ஒரு நாள் அருணுசல ஐயாவை இராமநாதன் செட்டியார் பார்த்து, கல்யாணியின் திருமணச் செய்தி பற்றி அவர்களிடம் கூறிஞர்கள்.

"அப்பச்சி, உம் பொண்ணு இரத்தினம் மாதிரி. எந்தப் பயலாவது வந்து கொத்திக்கிட்டு போயிடுவான். சீக்கிரமா நல்ல பையனு பார்த்து நான் சொல்றேன்."

"ஐயா, நமக்குப் பணங்காசு முக்கியம் இல்லே, பையன் தான் முக்கியம்."

"ராமையா, (அப்படித்தான் இராமநாதன் செட்டியாரை அருணுசல ஐயா அழைப்பார்கள்.) உன் குணம் எனக்குத் தெரியாதா, இல்லே உம் பெஞ்சாதி குணம் தான் எனக்குத் தெரியாதா? அதனுலே, அதுக்குத் தகுந்தமாதிரி பையனைப் பார்ப்போம்."

இராமநாதன் செட்டியார் அருணுசல ஐயாவிடம் மகிழ்ச்சியோடு விடைபெற்றுக் கொண்டு, வீடுவந்து சேர்ந்தார்.

ஒரு வாரத்திற்கெல்லாம் அருணுசல ஐயா இராமநாதன் செட்டியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

பக்கத்து ஊரில் சாத்தப்பச் செட்டியார் என்பவர் நல்ல வசதி படைத்தவர். அவருக்கு இரண்டு பையன்கள்; இரண்டு பெண்கள். ஒரு பையனுக்கும் இரண்டு பெண்களுக்கும் திருமணத்தை முடித்துவிட்டார். இன்னும் ஒரு பையனுக்குத் தான் திருமணம் நடக்கவேண்டி யிருக்கிறது. பையன் பி. காம். படித்திருக்கிருன். மதுரையில் ஓர் ஆடிட்டரிடம் பயிற்சி பெறுவதோடு அங்குள்ள அவர்களுடைய வட்டிக் கடையையும் கவனித்துக் கொள்கிருன். நம் பெண்ணைப் பற்றி அவன் தெரிந்து கொண்டிருக்கிருன். அதனுல், அவனுக்குச் சம்மதம் தான். அவன் பெற்ருேர்களுக்கும் சம்மதம் தான் என்ற விவரங்களைக் கூறிய அருணுசல ஐயா, "உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

அருணுசல ஐயா குறிப்பிட்ட சாத்தப்பச் செட்டியார், இராமநாதன் செட்டியார் வீட்டுக்கு எதிர்த்த வீட்டு மாணிக்கம் செட்டியாருக்கு உறவினர் ஆதலால், அவர் குடும்பத்தோடு அடிக்கடி அங்கு வந்து போவார். எனவே, பையனை இராமநாதன் செட்டியார் தம்பதிகள் பார்த்திருந்தார்கள். சாத்தப்பச் செட்டியார் குடும்பத்தைப் பற்றியும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

"ஐயா, அவங்க குணம் மனமெல்லாம் எப்படி?" என்று இராமநாதன் செட்டியார் கேட்டார்கள்.

"நல்லவங்கதான். இருந்தாலும் உங்கமாதிரி பெருந்தன்மையா இருக்க மாட்டாங்க. பணத்திலே ரொம்ப குறியா இருப்பாங்க. வேறே கெடுதல் ஒண்ணும் இல்லே" என்று ஐயா கூறினுர்கள்.

இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நம்ம கல்யாணி கூட பணத்திலே ரொம்ப குறியான பொண்ணுதான்," என்று சீதை ஆச்சி கூறினுர்கள்.

"அப்ப ரொம்ப பொருத்தமா போச்சு. இப்ப கல்யாணி எங்கே திருச்சிலே படிச்சிக்கிட்டு இருக்குதா?" என்று ஐயா கேட்டார்கள்.

"இப்ப லீவு இங்கே தான் இருக்கு" என்று கூறிய இராமநாதன் செட்டியார் சீதை ஆச்சியைக் குறிப்பாகப் பார்த்தார்கள்.

அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்ட சீதை ஆச்சி, தன் மகள் இருந்த அறைக்குச் சென்று, மாணிக்கம் செட்டியார் வீட்டுக்கு வருகின்ற அவர்களுடைய உறவினர் பையனைப் பற்றி நினைவுபடுத்தி,

“அவனை மணந்து கொள்ளச் சம்மதமா?” என்று கேட்டார்கள்.

கல்யாணி தன் சம்மதத்தை நாணத்தின் மூலம் தெரிவித்தாள்.

திருமணப் பேச்சுக்கள் விரைவாக நடந்தன.

சீர் தனம் என்றும் மாமியார் சாமான் என்றும் முறை தலைகள் என்றும் மாப்பிள்ளை விட்டார் கேட்ட தொகைகள் இராமநாதன் செட்டியாருக்கும் சீதை ஆச்சிக்கும் பெரிய அச்சத்தையே உண்டாக்கின.

அதறகெல்லாம் தைரியம் கூறி, அந்த இடத்தி லேயே அருணுசல ஐயா திருமணத்தைப் பேசி முடித்தார்கள்.

திருமணப் பேச்சு முடிந்ததும் ஒருநாள் அருணுசல ஐயா இராமநாதன் செட்டியாரை அழைத்து, “இரா மையா, உனக்கும் உன் மச்சினனுக்கும் மனத்தாங்கல் இருக்குன்னு எனக்குத் தெரியும். பெருந்தன்மையுள்ள நீ பொருட்படுத்தாம உன் மச்சினனுக்கு அவசியம் கல்யாணம் சொல்லணும். மாமக்காரன் இல்லாம ராமையா கல்யாணம் செஞ்சான் அப்படிங்கிற பேரு உனக்கு வேண்டாம்,” என்று கூறிச் சென்ருர்கள்.

இராமநாதன் செட்டியாருக்கும் அவர் மைத்துனன் காசிச் செட்டியாருக்கும் என்ன மனத்தாங்கல்?

இராமநாதன் செட்டியாருக்கு மலேசிய நாட்டில் ரப்பர்த் தோட்டம் ஒன்று இருந்தது. அவர்களுக்கு இரத்தக் கொதிப்பு நோய் இருந்ததால் அடிக்கடி வெளிநாடு போய் வருவதை விரும்பாததாலும் அங்கு நாட்டு நிலை சரியில்லாததாலும் தோட்டத்தை விற்று விட்டார்கள். அதிலிருந்து வந்த பணத்தைக் கொண்டு உள்நாட்டில் தொழில் ஒன்றைத் தொடங்க நினைத் தார்கள். அப்பொழுது அவர்களுடைய மைத்துனர் காசிச் செட்டியார், நாகப்பட்டினத்தில் வட்டிக்கடை ஒன்றில் பொறுப்பாளராகப் பணியாற்றி வந்தார்கள். தம்முடைய ஆச்சி அம்மையான் உள்நாட்டிலே தொழில் தொடங்க விரும்புகிருர்கள் என்பதை அறிந்த தும், இராமநாதன் செட்டியார் வீட்டைத் தேடி ஓடி வந்தார்கள். ஆச்சியைக் கண்டார்கள்.

“ஆச்சி, நம்மைச் சின்ன வயசிலேயே விட்டுட்டு ஆத்தாளும் அப்பச்சியும் போயிட்டாங்க. எனக்கு உங்களை விட்டா வேறே யாரு துணை? அய்த்தான் உள் நாட்டிலே தொழில் ஆரம்பிக்கப் போறதா கேள்விப் பட்டேன். உள்நாட்டிலேயே வட்டித் தொழில் இப்ப நல்லா இருக்கு. அதனுலே வட்டித் தொழிலேயே அய்த் தானை ஆரம்பிக்கச் சொல்லுங்க. நான் இருந்து கண் ணுங் கருத்துமா பார்த்துக்கறேன். ஏதோ சொற்பப் பங்கு வச்சிக்கிட்டாலும் சரி. இல்லே, லாபத்திலே அவுக இஷ்டப்படறதைத் தந்தாலும் சரி. நான் புள்ளை குட்டிக்காரன். இதுக்குமேலே எப்படி ஆச்சி சொல்றது?” என்று காசிச் செட்டியார் உருக்கத்தோடு கூறினுர்கள்.

தம்பியின் கோரிக்கை நியாயம் என்றே சீதை ஆச்சிக்குத் தோன்றிற்று. கணவரிடம் தம்பியின் எண்ணத்தைத் தெரிவித்தார்கள்.

"சீதை! எனக்கோ உடம்புக்கு சரியில்லே, நம்ம பையனே படிச்சிக்கிட்டு இருக்கிறன். அதனுலே நாம் தொழில் ஆரம்பிச்சா, அதைப் பார்த்துக்கிறதுக்கு நம்பிக்கையான ஒரு ஆளு வேணுமில்ல! அதனுலே உன் தம்பியை வச்சே தொழில் தொடங்குவோம்," என்று கூறிய இராமநாதன் செட்டியார் அவர்கள், காசிச் செட்டியாருக்குக் கால் பங்கு வைத்துத் தஞ்சாவூரில் தொழிலைத் தொடங்கினர்கள்.

தோட்டம் விற்று வந்த இலட்சத்துப் பத்தாயிரத்தில், எழுபத்தையாயிரத்தை வட்டிக் கடையிலே முடக்கினர்கள். அப்படித்தான் சொல்லவேண்டும். காசிச் செட்டியார் மேற்பார்வையில் அந்தப் பணம் முடங்கி, அடங்கி ஒடுங்கிவிட்டது.

ஓர் ஆண்டிற்குள் பல பேத்துமாத்துகள் செய்து காசிச் செட்டியார் ஐம்பதினுயிரம் ரூபாய் வரை தனதாக்கிக் கொண்டுவிட்டார்கள். இதைக் கடையிலிருந்த அடுத்த ஆள் மூலம் இராமநாதன் செட்டியாரும் சீதை ஆச்சியும் அறிந்தார்கள்.

சீதை ஆச்சி பதறிவிட்டார்கள். ஒரு ரூபாய் இரண்டுரூபாயா? ஐம்பதினுயிரம் ரூபாய்! தம் தம்பிக்கு சிபாரிசு செய்தவர்கள் அவர்கள் தானே? எனவே, தம் கணவர் என்னென்ன சொல்வார்களோ என்று துடித்துவிட்டார்கள். ஆனுல் இராமநாதன் செட்டியார் இதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. மனைவியை அழைத்துக் கொண்டு தஞ்சாவூர்க் கடைக்குச் சென்றுர்கள்.

மினுமினுப்போடு விளங்கிய காசிச் செட்டியார் வேண்டாவெறுப்பாக ஆச்சியையும் அய்த்தானையும் வரவேற்றுர்கள்.

தொழில் நிலையைப் பற்றி இராமநாதன் செட்டியார் கேட்டபோது, "தொழில்னு, லாபம் நட்டம் இருக்கத்தான் செய்யும். பெருங் குடுப்பாக் குடுத்த ரெண்டு மூணு பார்ட்டிகிட்டே இருந்து பணம் வர்லே. அதுக்கு யார் என்ன செய்யறது?" என்று அவர்கள் அலட்சியமாகக் கூறினர்கள்.

தம்மிடம் வந்து கெஞ்சிய தம் தம்பியா இப்படிப் பேசுகிறன்! என்று எண்ணிய போது சீதை ஆச்சிக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

"பாவிப் பயலே, எங்க செட்டியார் முருகனுக்குப் பயந்து சம்பாதிச்ச பணம். அதை நீ மோசம் பண்ணிட்டே, நீ உருப்பட மாட்டே," என்று சீதை ஆச்சி அப்படிச் சீறியது இராமநாதன் செட்டியாருக்கே வியப்பாக இருந்தது.

"சொந்தக்காரங்களோட சேர்ந்து தொழில் பண்ணப்படாதுன்னு சொல்லுங்களே, அது எம்புட்டு நியாயம்ங்கிறது இப்பத்தான் தெரியுது. சொந்த ஆச்சியா இருந்தும் உருப்பட மாட்டேன்னு சொல்லிட்டியே. இனிமேலும் முகத்திலே நான் முழிப்பேனு?" என்று கூறிவிட்டுக் கையிலிருந்த பெட்டி கத்துச் சாவியை இராமநாதன் செட்டியார் முன் வீசிவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு காசிச் செட்டியார் அங்கிருந்து நடையைக் கட்டினர்கள்.

ஆத்திரத்தால் சீதை ஆச்சியின் உள்ளம் கொதித்தது. கண்களிலிருந்து நீர் பொல பொல வென வழிந்தது. தம் கணவரை ஏறெடுத்துப் பார்க்கும் சக்தியற்றவர்களாக அவர்கள் விளங்கினர்கள்.

'நாகப் பாம்பிற்குப் பால் ஊற்றினல் கூட புண்ணியம் உண்டு, இந்த நன்றி கெட்டவனுக்கு உதவி செய்யும்படி கூறிவிட்டோமே' என்று துடித்தார்கள்.

"இந்த மோசக்காரனேட சேர்ந்து தொழில் பண்ணுங்கன்னு தெரியாம சொல்லிட்டேன்." அதற்கு மேல் சீதை ஆச்சியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பொருமிப் பொருமி அழுதார்கள்.

இராமநாதன் செட்டியார் உள்ளம் உருகியது. "சீதை! நீ சொன்னதாலே மட்டும் அவனேட சேர்ந்து நான் தொழில் ஆரம்பிச்சிடலே. நானும் முடிவு செய்துதான் தொழில் ஆரம்பிச்சேன். அதனலே, நீ ஏன் இதுக்கு இப்படி வருத்தப்படறே? உனக்கு அவன் தம்பின்ன எனக்கு அவன் மச்சினன் இல்லியா? அவன் சுத்த மடையன். "நான் பிள்ளை குட்டிக்காரன், தொழில் செய்யணும், எனக்குக் கொஞ்சம் தொகை தந்து உதவுங்கன்னு அவன் கேட்டிருந்தா இருபதோ முப்பதோ குடுத்திருப்பேன். நாளைக்கு அவன் மூத்த பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணணும்னு வந்து நின்ன நாம உதவ மாட்டோமா? அதை விட்டுட்டு மோசக்காரன்கிற பேருக்கு ஆளாயிட்டானே என்ற வருத்தம்தான் எனக்கு," என்று இராமநாதன் செட்டியார் கூறினர்கள்.

சீதை ஆச்சியின் உள்ளம் பெருமிதத்தால் நிறைந்தது. தஞ்சாவூர்க் கடையில் இழுத்துப் பறித்துக் கொண்டு அவர்களுக்கு இருபதினயிரம் ரூபாய் வசூலாயிற்று.

தான் மோசம் செய்த ஐம்பதினயிரத்தையே முதலாக்கி அந்த ஊரிலேயே வேறு வீடு பிடித்துத் தன் சொந்த விலாசத்திற்குக் காசிச் செட்டியார் கடையைத் தொடங்கினர்கள். அத்தகைய காசிச் செட்டியாருக்குக் கல்யாணியின் கல்யாணத்திற்குச் சொல்வதா கூடாதா என்பதுதான் அவர்களுடைய எண்ணமாயினும் அருணசல ஐயா அவர்களுடைய வார்த்தையைத் தட்டுவது எனபது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. எனவே அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்காக அவர்கள் சீதை ஆச்சியை அழைத்தார்கள்.

(தொடரும்)

விளம்பரம் ஒரு கலை

கே. என். சுப்பையா பி. காம். ஆனர்சு.

விளம்பரம் இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாகப் பரவியிருப்பது கண்கூடு...! ஒரு காலத்தில் விற்பனைப் பொருள்களுக்கு விளம்பரம் செய்வதையே பெரும் பொருள் விரயமென்றும் எனவே பயனற்றது, என்றும் எண்ணியதுண்டு. ஆனால் காலம் மாறிவிட்டது.! கலைஞர்களும் கவிஞர்களும் ஏன் அரசியல் வாதிகளும் கூட தம்மைத் தாமே விளம்பரப் படுத்திக் கொள்ளத் துடிக்கும் விந்தையான காலம் இது...! முன்னேற்றப் பாதைக்கு விளம்பரம் முதல் படியாகக் கருதப்படும் நேரம் இது.

இந்த விந்தையான காலப் போக்கில் வாழும் நாம் நோக்கப் போவது விளம்பரம் விற்பனைப் பொருள்களுக்கு தேவைதானா? விளம்பரத்தினால் விற்பனை அதிகரிக்கிறதா? விளம்பரத்தால் ஊதியமா? இழப்பா? ஊதியந் தான் எனில் எவரெவர் அவ்வூதியத்தைப் பெறுகின்றார்கள் என்பது போன்றவையே!

அரசினரும் கல்வி நிலையங்களும் அறச்சாலைகளும் கூட விளம்பரம் கொடுப்பதைப் பார்க்கிறோம். எனவே விளம்பரம் வெறும் வாணிக நோக்குடன் மட்டும் இருக்க வேண்டு மென்று எந்த நியதியும் கிடையாது.மாறாக அது போன்ற நிறுவனங்களின் எண்ணங்களையும் நோக்கங்களையும் அவை ஆற்றிய பணிகளையும் ஆற்றவிருக்கும் பணிகளையும் உலகிற்கு உணர்த்த விளம்பரம் போன்ற வேறு அனுகூலமான சாதனமும் உண்டோ?

ஒரு சிலர் வாணிப விளம்பரத்தைப்பற்றித் தவறான கருத்துக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட தவறான கருத்துக்களில், 'போட்டி இருப்பின் விளம்பரம் அவசியமே போட்டி இல்லையாயின் விளம்பரம் தேவையற்றது'' என்னும் கருத்தும் ஒன்றாகும்... அது தவறு! போட்டியில்லையெனினும் விளம்பரம் அவசியமே. எப்படி?

எடுத்துக் காட்டாக, ஒரு ஊரில் ஒரே ஒரு திரைப்படக் கலை மண்டபம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். போட்டி ஒன்றும் இல்லை. இருப்பினும் நாள் தோறும் என்ன திரைப்படம் நடக்கிறது என்ற விவரத்தை ஊர்மக்களுக்கு அறிவிக்க விளம்பரம் வேண்டியதிருக்கிறது. மேலும் அப்படி விளம்பரம் செய்வதால் முன்னைவிட அதிக மக்கள் திரைப் படம் இன்னது என்று தெரிந்து கொண்டு திரைப்படம் பார்ப்பதால் வருவாயும் அதிகரிக்கிறது. ஆகவே எல்லாப் பொருள்களுக்கும் எல்லா நிலையிலும் விளம்பரம் அவசியமே.

விளம்பரம் ஒரு கலை

விளம்பரம் ஒரு கலை. நாம் கொடுக்கும் விளம்பரம் "ஆடம் போல வலிமையும் உறுதியும் கொண்டதாகவும் "ஈவ்" போல பிறரைக் கவர வல்லதாகவும் இருக்க வேண்டும்.

அப்படி இருப்பின் அந்தப் பொருளுக்கு,புதிய தேவையையும் கிராக்கியையும் உண்டு பண்ணும்,

அல்லது அப்பொழுது இருந்து வரும் தேவையையும் கிராக்கியையும் அதிகப்படுத்தும். அப்படி விளம்பரம் அடிக்கடி பத்திரிகை மூலம் மற்ற, சாதனங்கள் மூலம் கொடுப்பதால் விளம்பரப்படுத்தப் பட்ட பொருளின் விற்பனை அதிகரிக்கும். உடனடியாக அதிகரிக்கவில்லையேல் இந்த விளம்பர சக்தி வாங்குபவர்கள் எண்ணத்தில் நிலைத்து நின்று அவர்களுக்கு இப்பொருள் தேவைப்படும் பொழுது விளம்பரப் படுத்தப் பட்ட அதே பொருளையே வாங்கத் தூண்டும். விளம்பரம் உடனடியாகவோ அல்லது காலப் போக்கிலோ ஊதியம் கொடுக்கவல்ல ஒப்புயர்வற்ற சிறந்த கருவி.

விளம்பரச் செலவு வீண் செலவா?

விளம்பரச் செலவு வீண் பொருள் விரையமென்றும் அதனால் உற்பத்தியாளரோ பொருள் வாங்குபவர்களோ எந்தவித ஊதியமும் பெறுவதில்லை என்றும் மாறாக விளம்பரச் செலவும் பொருளின் விலையாக பரிணமித்து பொருள் வாங்குவோரை இழப்பிற்காளாக்குகிறது என்றும் கருதப்பட்டு வந்தது! கருதப்படுகிறது! அப்படி எண்ணுவது சரியா எனில் முற்றிலும் சரியில்லை என்றே சொல்ல வேண்டும்.

விளம்பரச் செலவு ஒரு நல்ல முதலீடு. அறிஞர் ஆரிதாவர் கூறுவது போல, "விளம்பரம் ஒரு வகை முதலீடு, செலவல்ல; பொது மக்களின் மனதில் இடைவிடாது நன்னம்பிக்கையை வளர்க்க வல்லது" எனவே விளம்பரச் செலவு பயனற்றதல்ல. மேலும் விளம்பரப்படுத்தப்பட்ட பொருள்களுக்கு கிராக்கி அதிகரிக்கிறது. உற்பத்தி கூடும் பொழுது உற்பத்தியாளர் கை நிறைய ஊதியம் பெறுகிறார். ஒரு வேளை பொருள் வாங்குவோருக்கு இழப்பை விளைவிக்குமா என்று எண்ணம் தோன்றுவது இயற்கை! ஆனால் வாங்குவோர் நட்டத்திற்குள்ளாவதில்லை. எப்படி?

ஒரு சாதாரண பொருளாதாரத் தத்துவமுண்டு. சிறு தொழில் முறையில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டால் அப்பொருளின் உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. அதே பொருளை பெருந் தொழில் முறையில் உற்பத்தி செய்தால் உற்பத்திச் செலவு கணிசமான அளவுக்கு குறைவதுடன் பொருளின் அடக்கவிலையும் குறையும்.

ஒரு பொருளை பெருந் தொழில் முறையில் உற்பத்தி செய்ய வேண்டுமானால் பொருளின் தேவை அதிகமாக இருக்க வேண்டும். தேவை குறைவாக இருக்கும் பொழுது பெருந் தொழில் முறையில் உற்பத்தி செய்தால் வெறும் மூலதன முடக்கமாக முடியும். தேவை அதிகரிக்க வேண்டுமானால் அப்பொருளின் குணம், பயன், மற்ற குணங்கள் வாங்குவோருக்குத் தெரிய வேண்டும். வாங்குவோர்க்குப் பொருளைப் பற்றி உணர்த்தி வாங்கும் நிலைக்குக் கொண்டு வரும் சாதனம் தான் விளம்பரம்.

மாய சக்தி

விளம்பரப் படுத்தப்பட்ட பொருள் அதிக அளவில் விற்பனை ஆகிறது. எனவே உற்பத்தியாளர் பெருந்தொழில் முறையில் அந்தப் பொருளை உற்பத்தி செய்கிறார். அதனால் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைகிறது. கணிசமாக உற்பத்திச் செலவு குறைந்து

அடக்கவிலை குறையும் பொழுது விற்பனை விலையும் குறைகிறது. பொருள் வாங்குவோர் ஊதியம் பெறுகின்றனர். எனவே விளம்பரம் செய்யப்படும் பொருளை வாங்குவோர் இழப்பிற்குள்ளாவதில்லை. அவர்கள் ஊதியமே பெறுகின்றார்கள்.

பொருள் உற்பத்தியில் மையமாக விளங்கும் தொழிலாளர்களும் விளம்பரத்தால் இரண்டு வகையில் பயனடைகின்றனர்.

(1) பல புதிய தொழிலாளர்கள் வேலை பெறுகின்றனர். (2) வேலையில் இருக்கும் தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெறுகின்றனர்:

பொருளுக்குத் தேவை அதிகமாக இருந்து பொருளின் உற்பத்தி குறைவாக இருந்தால் பொருளின் விலை உயர்ந்தும் பொருளின் உற்பத்தி, தேவைக்குத்தக்கபடி அதிகரித்தால் பொருளின் விலை குறைந்தும் காணப்படுவது இயல்பு மட்டுமில்லை பொருளாதாரத்தத்துவமும் கூட.

அதன்படி பொருளின் உற்பத்தி, பெருந்தொழில் முறையில் துவங்கப்படும் பொழுது அதிகத் தொழிலாளரின் சேவை தேவைப்படுகிறது. எனவே புதிதாகப் பலர் வேலை பெறுகின்றனர். மேலும் ஒரு சாதாரண அலுவலகப் பணியாள் மாதா மாதம் ரூ 8 செலவு செய்து ஒரு செய் பொருள் வாங்குகிறார் என்று கொள்க. அந்தப் பொருள் உற்பத்தியாளர் விளம்பரம் கொடுத்து, பொருளின் தேவையை அதிகப்படுத்தி அதிகம் உற்பத்தி செய்கிறார் என்றும் கொள்க. பொருள் விலை ரூ. 8ல் இருந்து ரூ 6 ஆகக் குறைவது இயற்கை. இப்பொழுது அந்தப் பணியாள் ரூ. 2 ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து மிகுதியாக வைத்திருக்கிறார். மனிதனின் தேவை நிரந்தரமானது. புதிது புதிதாக தேவைகள் பிறந்து கொண்டே இருக்கும். எனவே இதுவரை வாங்காத ஒரு துணைப் பொருள் மிகுதியாக இருக்கும் ரூ. 2 மூலம் அவன் வாங்குவான். இப்போது அந்தத் துணைப் பொருளின் தேவையும் அதிகரிக்கிறது. துணைப் பொருள் உற்பத்திக்கு தொழிலாளர்கள் தேவைப் படுகிறார்கள். புதிதாக இன்னும் பலருக்கு வேலை கிடைக்கிறது.

ஊதிய உயர்வு எப்படி

அதிகமாவும் புதிதாகவும் உற்பத்தி துவங்கப்படும் பொழுது தொழிலாளர்கள் அதிகமாகத் தேவைப் படுகிறார்கள். ஆனால் தொழிலளார்கள் எண்ணிக்கை முன்னைப் போலவே நிலைத்து நிற்கும். இல்லையேல் கொஞ்சம் அதிகரிக்கும். ஆனால் உற்பதி அதிகரிக்கும் அளவு அதே விகித முறையில் தொழிலாளர் எண்ணிக்கை அதிகமாவதில்லை. தொழிலாளர் குறைவாகக் கிடைப்பதால் உற்பத்தியாளர்கள் அதிக ஊதியம் கொடுக்கிறார்கள்.

ஆக விளம்பரமெனும் மாயச் சக்தியால் உற்பத்யாளரும், பொருள் வாங்குவோரும் தொழிலாளர்களும் எப்படி பயனும் ஊதியமும் அடைகிறார்கள் என்பதைப் பார்த்தோம். வாணிபம் தழைக்க விளமபரம் அவசியமே. விளம்பரம் ஒரு விநோதமான கலை...!

திட்டம் வாழ்க!

பாரத நாட்டில் பரவிக்கிடக்கும் பல்வேறு இனங்களும், மக்களும், தானும்வாழ, தம்குலம் தழைக்க, தமக்கென்று தனி அமைப்புக்களும், நிறுவனங்களும் அமைத்துப் பயனுற்றுப் பல்லாற்றானும் பெருமையும் பேறும் பெற்றுவருங்காலை நமக்கென்று தனித்ததொரு அமைப்பில்லாத குறையை நீக்க வந்த நம் குல விளக்கென்றே நம் "நகரத்தார்" இதழ் குறித்துப் பெருமையுறுகின்றேன்.

செப்டம்பர் இதழில் குறிப்பிட்டுள்ள சேலத்துச் செயலர்தம் திட்டங்களின் பின் சேர்க்கையாக இம் மடலை எழுதுகின்றேன்.

நம் சமூக இளைஞர்கள், செல்வியர்ன் திருமணங்கள் எளிதில் சிக்கனமாக நிறைவேற விபரங்கள் சேகரித்துத் தருவதும், வசதியற்ற பெண் வீட்டாருக்குப் பொருள் வழங்கி மணம் நிறைவேற உதவியாற்றுவதும், படித்த இளைஞர்களின் வேலையின்மையை போகவிட வேலை தேடித்தரும் நிறுவனம் அமைத்து அதில் குறைந்தபட்சம் நம்மவர்களின் தொழில் துறை நிறுவனங்களிலாவது நம்மவர்களையே அமர்த்துவது என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதும் நமது கடமைகளாகக் கொள்ளலாம்.

ஏனைய பிற மதத்தவரும், பிற்போக்கு இனத்தவரும் கூட தமக்கென ஏற்படுத்திக் கொண்டுள்ள சங்கங்களின் மூலம் இது போன்ற நோக்கங்கள் நிறைவேறப் பெற்று அவர்கள் வாழ்க்கை நிறைவு பெற்று விளங்குகையில் ஆண்டாண்டு காலமாகப் பீடும் பெருமையும் வளமும் பெற்று விளங்கிய நம் இனம் இன்று பெருங்காயப் பாத்திரமாக வெறும் பெயர்ப் பெருமையெனும் வாசனையை மட்டும் தாங்கிக்கொண்டு தினம் தினம் நசுங்கிச் செத்துக் கொண்டிருக்கும் நிலைமாற "நகரத்தார்" இதழும், "நகரத்தார் சங்க"ங்களும் அயராது பணியாற்றல் வேண்டும் என விரும்புகிறேன்.

அத்தோடு நம் இனத்தவர் முற்போக்கு இனத்தவர் என்று அரசினரால் பதியப்பெற்று நமது இனத்தில் வறுமையுற்றோர் தம குழந்தைகள் தமிழக அரசின் இலவசக் கல்வி உதவித் தொகையோ, அல்லது மத்திய அரசின் ஸ்காலர்ஷிப்போ எது ஒன்றும் பெற வாய்ப்பின்றி வருந்தும் நிலைமாற்ற நம் இனத்தவரையும் பிற்பட்ட வகுப்பினராகப் பதிவு செய்ய அரசினருக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

நம்மில் பெரும்பான்மையோர் வளமிழந்து வாழ்விழந்து நிற்கையில், அவர்தம் வாழ்வு நல்வாழ்வாய் மலர இம் முயற்சிக்கு நம் இனப் பெரியவர்கள், செல்வந்தர்கள் மனமுவந்து உதவிசெய்ய முன்வரல் வேண்டும்.

நம் குலவிளக்குகளாம் குழந்தைகளின் படிப்புக்காகவும், பெண்களின் மணவாழ்வுக்காகவும், வீட்டை விற்று, பொன்னை விற்று, பொன்விளையும் பூமியையும் விற்று அல்லலுற்று இறுதியில் குடும்பமே நடுத்தெருவில் நின்று ஆலாய்ப் பறக்கும் அவல நிலை மாற வேண்டுமானால் இவ்வுதவியைக் கட்டாயமாக மிக விரை

வில் ஆற்றுதல் வேண்டும். அதற்குச் செல்வாக்குள்ள பெரியவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்தல் வேண்டும். இதுகுறித்து உடனடியாகச் செயலாற்றும் வழிமுறைகளை "நகரத்தார்" இதழ் கொடுக்குமென நம்புகிறேன். மிகவும் பிற்பட்ட வகுப்பினராக, தாழ்த்தப்பட்ட மக்களாகக் கருதப்பட்டுவரும் அரிசனங்கள் கூட அரசினரின் ஸ்காலர்ஷிப்பும் ஏனைய ஆதரவு பலவும் பெற்று, கைப்பணச் செலவின்றிப் பொறியியல் வல்லுநராகவும் மருத்துவ நிபுணராகவும் கல்விகற்று வெளியேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நம் மாணுக்கர்களோ அறிவும், ஆசையும், அளவற்ற ஆர்வமும் பெற்றிருந்தும் வசதியில்லை என்ற ஒரே காரணத்தால் பள்ளி இறுதி வகுப்பைத்தாண்டிக் காலடி எடுத்துவைக்க இயலாத நிலையில், குமாஸ்தாவாகவும், வட்டிக்கடைப் பணியாளராகவும் உழலும் நிலை மாற வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பலரும் அரசு அலுவல்களில் உயர் பதவிகளைப் பெறும் நேரத்தில்நம் மாணவர்கள் கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரிகளாக, அறிவிருந்தும் அதிர்ஷ்ட மற்றவர்களாக ஏங்கிநிற்கும் நிலை வருந்தற் குரியது.

வகுப்பாலும் பிரிவாலும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்து, வருமானத்தால் உயர் நிலையில் உள்ள பலரும் முற்பட்ட வகுப்பு எனும் போர்வையால் மறைக்கப்பட்டு அரசினரின் உதவி அனைத்தையும் பெறுகின்றபோது உண்மையிலேயே வருவாய் ஏதும் இன்றித் திண்டாடும் நம் இனத்தவரைப் பிற்பட்ட இனத்தவர் என அரசுக்கு அறிவித்து இலவசக் கல்வி உதவித் தொகையும் பிற சலுகைகளும் பெற முயற்சி செய்வதில் தவறேதும் இல்லை. உண்மையை மறைத்து கௌரவம் பார்க்கும் நிலை இன்னும் நம்மை விட்டபாடில்லை. வீண் கௌரவத்தால், வருகின்ற நம் இளம் சமுதாயம் அழியாமல் காப்பது நம் கடமை என்பதை யாவரும் உணரவேண்டும்.

மேல்படிப்பு படிக்க விரும்பும் நமது மாணவர்கள், மேனாடு செல்ல விழைந்து வழிதெரியாது, அதற்கான சலுகைவாங்க முறை தெரியாமல், நல்லோர் வல்லோர் உதவியின்றித் தடுமாறும் திறமைமிக்க, திக்கற்ற ஏழை மாணவர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும் நமது இதழ் விளங்குமென நான் நம்புகிறேன்.

"வரதட்சணைகள், மாமியார் சாமான் போன்ற ஆடம்பரச் செலவின்றித் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்ற, சேலம் நகரத்தார் சங்கச், செயலாளரின் கருத்தை நான் முழுமனதுடன் வரவேற்கின்றேன். இக்கருத்தை ஏற்றுக் கொள்ளும் துணிவுள்ள படித்த நம் இளைஞர் எவரேனும் என் சகோதரியை மணக்க முன் வருவாராயின், அதுபோல நானும் எளிய முறையில, சீர்வகைகளை எதிர்பாராது அழகும் அறிவும் பெற்ற நம் குல மங்கையினை மணம் செய்துகொள்ளும் வாய்ப்பினைப் பெரும் பேருகக் கருதுவேன்.

பேச்சிலும் எழுத்திலும் புரட்சியையும் புதுமையையும் சீர்திருத்தக் கருத்துகளையும் அள்ளித் தெளிப்பவர்களாக அன்றி உண்மையிலேயே உளமாறச் செயலாற்றும் திறனும் துணிவும் படைத்த நம் இளைஞர்களைப் பற்றிய விபரங்களை "நகரத்தார்" இதழ் சேகரித்துக் கொடுக்க வேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறேன்.

"குடியுயரக் கோன் உயரும்" என்ற கருத்துக் கேற்ப நம் இனம் வாழ வழிவகுத்து நம் நாட்டை யும் வளமாக்க "நகரத்தார்" இதழ் நல்ல முறையில் நீண்ட நாள் வாழ்ந்து செழிக்க வேண்டு மென இறைஞ்சுகிறேன்.

நன்றி

அன்பு,

நா. மெய்யப்பன்.

நச்சாந்துபட்டி.

நமது இனத்தாருக்கு என்று ஒரு பத்திரிகை வருவது பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. ஏனென்றால் பயன் மிகுந்த பல செய்திகளைப் படிக்கின்ற நல்ல வாய்ப்பினையும் அவை பற்றிச் சிந்திக்கின்ற இன்றியமையாமை யையும் அது ஏற்படுத்துகின்றது. அதோடு ஒருவர் கருத்தினைப் பற்றி மற்றொருவர் அறிகின்ற வாய்ப்பும் ஏற்படுகின்றது.

திரு. ஆறு. அழப்பன் அவர் கள் எழுதிய அன்புள்ள ஆச்சிக்கு என்ற கட்டுரையினையும் சேலம் நகரத்தார் சங்கச் செயலளார் அவர்களின் திட்டத்தையும் வெளியிட்டு உதவிய தங்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

சேலம் நகரத்தார் சங்கச் செயலாளர் திரு. பழ. லெ பழநி யப்பன் அவர்கள் எங்கள் மேலான கருத்துக்களை அவர்களுக்குத் தெரி விக்கும்படி குறிப்பிட்டிருந்தார் கள். என் கருத்தினை நம் நகரத் தார் இதழ் மூலம் தெரிவித்தால் நம் குலத்தவர்கள் எல்லோரும் அறியும் வாய்ப்பு ஏற்படும் கருதி இதனை எழுதியுள்ளேன்.

செயலாளர் அவர்களின் திட் டம் இடம் பெற்று வந்த இதழ், அண்ணல் காந்தியடிகளின் புகழ் போற்றும் பொன்மலராய், நூற் றாண்டு விழாச் சிறப்பிதழாய் மலர்ந்திருப்பதைக் காணுங்கின்ற பொழுது, நம் இனம் மறு மலர்ச்சி பெறும் நாள் விரைவில் வரும் என்ற நம்பிக்கை ஏற்படு கிறது.

சென்ற பல ஆண்டுகளாக நான் கண்டு கொண்டிருக்கின்ற கனவை சேலம் நகரத்தார் சங்கச் செயலாளர் முன்னேற்றக் கருத் தாக, நல்ல திட்டமாகத் தெரி வித்திருப்பதறிந்து பெரும் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

எந்த நல்ல காரியத்தையும் அறிவும், ஆற்றலும்—செல்வ வள மும் உடையவர்களால்தான் செய லாக்க முடியும். இவர்களோடு இளைஞர்கள் நினைத்தால் இயலும்.

திருமணங்களில் மாமியார் சாமானுக்குப் பணம் கொடுப்பது போன்ற பழக்கங்கள் நிற்கவும், ஆதரவற்ற பெண்களுக்கு ஆதர வும் — பணத்தையே குறிக் கோளாகக் கொள்ளாமல் நம் இனத்துப் பெண்களை மணந்து கொள்ளவும் ஆகிய முன்னேற்றங் களைச் செய்ய கல்வி அறிவும் முன் னேற்ற நோக்கமும் கொண்ட நம் இனத்து இளைஞர்களும் யுவதி களும் துணிந்து முன்வர வேண் டும்—அந்த நிலை உருவானால் துணிவற்ற பிறரும் நாளடைவில் துணிவு பெறுவார்கள்.

ஆனால் இதுபோன்ற காரியங் களைத் தனிப்பட்டவர்கள் செய் வதைவிட ஒரு நல்ல அமைப்பு மூலம் செய்வதே வலுவும் பயனும் உடையதாக இருக்கும். எனவே

இவற்றை யெல்லாம் நம் சங்கங்கள் மூலம் செய்வதே பயனுடையதாக ஆகும்.

ஆதரவற்ற பெண்களுக்கு—தொழில்களை உருவாக்கி விடுதிகள் அமைத்துத் தர வேண்டும். அவ்வாறு விடுதிகளில் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்ற பெண்கள் கருமமே கண்ணாக இருக்க வேண்டும். சில காலம் ஆனதும் சிறிது ஆதரவு உள்ளது என்ற நிலை நேர்ந்ததும்—அத்தை தையைப் பார்க்கப் போகிறேன். சின்னத்தாளைப் பார்க்கப்ப போகிறேன். என்று பொறுப்பினைக் கழிப்பதும் ஆதரவு இல்லை என்று வந்துபின் பெரிய ஆதரவு இருப்பதாக நடந்து கொள்வதும் முற்றும் மாறவேண்டும்.

நம் மரபினர் அறம் பல செய்தவர்கள். இன்று அந்த எண்ணம் படிப்படியாகக் குறைந்து வருவதைக் காண்கின்றோம். மிகவும் இரங்கத்தக்க நிலையில் உள்ள பெண்கள் அனைவரும் நம் சகோதரிகள் தான் என்று செல்வப் பெருமக்கள் எண்ணி உதவ முன் வருவார்களே யானால் நம் மரபுப் பெண்களின் துயரம் சூரியனைக் கண்டபனி போல நீங்கும்.

அந்த நாளின் நம்முன்னோர்கள் பிற இனத்தவரின் பல திருமணங்களுக்கு உதவி செய்து அந்தத் திருமணங்கள் சிறப்பாக நடக்க பெருந்துணையாக இருந்தார்கள் என்று கேள்விப்படுகிறோம். ஆனால் இன்று நம் பெண்கள் பலருக்குத் திருமணம் நடைபெறுமா—வாழ்வு நலம் பெறுமா என்று ஏங்கும் நிலையே நிலவி வருகிறது.

தனிப்பட்ட செல்வந்தர்களோ—அல்லது சங்கங்களோ முன் வந்து செட்டிநாட்டில் முக்கியமான இரண்டு ஊர்களில் பெண்களுக்கு உரிய நல்ல தொழிலைத் தொடங்குவதுடன் விடுதிகளையும் தொடங்கி உதவினால் வாழ்க்கைச் சுமை குறையும்.

நாம் காலத்திற்கேற்ப ஆடை அணிகளை மாற்றி அணிந்து கொள்வதைப் போல, தற்காலப் பொருளாதர நிலைக்கேற்ப நமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக் கொள்வதுதான் இன்றைய அவசரத் தேவை.

இடையயே புகுந்துவிட்ட வீண்பெருமையுடன் ஆடம்பரமும். அநியாயச் செலவும் நம்மை விட்டு அகன்றிட வாலிபர்களும் யுவதிகளும் உடன் முன்வர வேண்டும்—முதலில் அவரவர்கள் குடும்பத்தில் தாய் தந்தையருக்கு நிலையை விளக்கி மாற்றம் ஏற்பட உதவ வேண்டும். பின் ஊர் மக்களுக்கு திடமாக மாற்றங்கள் தேவை என்பதை எடுத்துச் சொல்ல முடியும். இருள் படிந்து கிடந்த பெரியதொரு நாட்டையே அண்ணல் காந்தியடிகள் தம் உழைப்பால், தொண்டால், தியாகத்தால் ஒளியுடையதாக ஆக்கினார்.

அவர் வழி நின்று-பொறுமையோடும் தியாக உணர்வோடும்—பாடுபட்டால் நம மரபினர் நல்வாழ்விற்கு அடிகோல முடியாதா என்ன?

எனவே இந்த முயற்சிக்கு நல்ல அமைப்புகள் மூலம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகின்றேன். சேலம் நகரத்தார் சங்கச் செயலாளரின் திட்டம் மிகவும் உயர்ந்தது. அது செயலாவதற்கு மரபுப் பெருமக்கள் அனைவரும் மன முவந்து முன் வரவேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ராம. வசந்தா
தேனாம்பேட்டை, சென்னை-18.

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம்

பெர்லின் விமான நிலையத்திலிருந்து மொழி பெயர்ப்பாளர் அழைத்துச் செல்ல அந்நகரின் சிறப்புமிக்க 'உன்டர் டென்லின்டன்' என்னும் விடுதிக்குச் சென்றோம். 'உன்டர் டென்லின்டன்' என்றால் எலுமிச்சை மரங்களுக்கு அடியில் என்று பொருளாம். அவ்விடுதியின் பெயரும் அது அமைந்திருந்த சாலையின் பெயரும் ஒன்றேயாகும். அச்சாலையின் இருமருங்கிலும் எலுமிச்சை மரங்கள் அணி செய்ததே இப்பெயர் வரக்காரணம் போலும்.

ஜூன் 21-ஆம் நாள் காலை 10 மணிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க உலக சமாதானப் பேரவை தொடங்கியது. அதன்முன் அம்மாநாட்டின் பிரதிநிதிகளுக்கெல்லாம் ஒரு கைப்பை, லெட்டர் பாட், பால்பாயின்ட் பென் ஆகியனவற்றை குறிப்பெடுத்துக் கொள்ள வாய்ப்பாக வழங்கினர்.

101 நாடுகளிலிருந்து 1102 பிரதிநிதிகள் பங்கு பெற்றனர். 56 சர்வதேச நிறுவனங்களும், 320 தேசிய நிறுவனங்களும் இப்பேரவையைக் கூட்டின.

மாநாட்டினை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அரசவைத் தலைவர் வால்டர் உல்ப்ரிஷ்ட் துவங்கி வைப்பதாக இருந்தது. அன்னார் உடல் நலக்குறைவு காரணமாக வர இயலாது போனமையால் அவரது துவக்க உணர்வை பேராசிரியர் ஆல்பெர்ட்போர்டன் (ஜெர்மன் சோஷலிஸ்ட் ஒற்றுமைக் கட்சி பொலிட்பூரோ உறுப்பினர். உலக சமாதானக் கவுன்சில் உறுப்பினர்) துவக்க உரையைப் படித்தார்கள். துவக்க உரையில் மனித சமுதாயப் பகுதிகளை இவ்வளவு விரிந்து பரந்த அளவிலே உலக அமைதி லட்சியத்திற்காக இதற்குமுன் எந்தச் சமாதானப் பேரவையும் இதுவரை திரட்டியதில்லை என்பதனை வலியுறுத்தியது என்றும் ஜெர்மன் குடியரசு சமாதானச் சக்திகளின் பக்கமே இருந்து வரும், போர் வெறியர்களை எதிர்த்து வரும் என்றும் வலியுறுத்திக் கூறியது.

அதன்பின் உரையாற்றிய நமது குழுவின் தலைவரான வி.கே. கிருஷ்ணமேனன் ஆற்றிய விரிவான உரையில் தற்கால உலக நிலைமையை அலசி ஆராய்ந்து கெடுபிடிச்சூடு பிடித்துள்ள இடங்களைக் குறிப்பிட்டு அவற்றால் அமைதிக்கு ஏற்படும் பெரும் அபாயத்தை விளக்குகிறார். மேலும் வியட்நாம் போரைக் கண்டித்து தெற்கு வியட்நாம் அரசாங்கத்தை உடனடியாக அங்கீகரிக்

கும்படி ஐ.நாவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திருமதி அருணா ஆசப் அலி, திரு பூபேஸ் குப்தா, திரு. யாதவ், திரு. பார்க்கவா, திரு பேராசிரியர் ரகுபீர் சக்ரவர்த்தி முதலிய நம் நாட்டுப் பிரமுகர்கள் பலர் உரையாற்றினார்கள்.

இப்பேரவைக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் ஊதாண்ட் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில் சர்வதேசக் கூட்டுறவுக்குப் புதிய புதிய வழி வகைகளைத் தேடி அமைதியையும் கருத்து இணக்கத்தையும் விளக்கும் கூட்டம் இப்பேரவை எனக் குறிப்பிட்டிருந்தார்.

மாநாட்டின் காலைப் பேரவைக் கூட்டத்திற்குப் பின் கீழ்க்கண்ட பிரச்னைகள்பற்றி ஐந்து குழுக்கள் அமைக்கப்பட்டு விரிவாக ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

(1) வியட்நாம், (2) ஐரோப்பிய பாதுகாப்பு, (3) மேற்காசிய நிலைமை (4) காலனி முறை, அரைக் காலனி முறை, தேசிய விடுதலை, (5) படைக் குறைப்பு.

இக்குழுக்களில் வியட்நாம் பற்றி வி. கே. கிருஷ்ண மேனன் தலைமையில் கூடிய குழுவில் நானும் பங்குபெற்று விவாதங்களில் கலந்து கொண்டேன். இக்குழுக்களின் விவாதங்கள் தொடர்ந்து 22, 23 ஆம் நாட்களில் நடைபெற்றன சமாதானத்திற்கான வழி துறைகளை இக்குழுக்கள் அறிக்கைகள் மூலம் சமர்ப்பித்தன. 24-ஆம் நாள் காலை முடிவுரையில் பேரவை உலக மக்களுக்கும் அரசுகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறது. 'உலக நிலைமையில் முதன்மையான பிரச்னைபற்றி விவாதித்து அவற்றில் ஒரு விரிவான கருத்து உடன்பாடு கொண்டோம். சுதந்திரமான ஜனநாயக உணர்ச்சியிலே வளமான விவாதங்கள் நடந்ததில் மகிழ்ச்சியையும், மனநிறைவினையும் தெரிவித்துக்கொள்கிறோம். அமைதி விரும்பும்எல்லா மக்களும் ஏகாதிபத்திய சக்திகளும் தங்கள் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவது அவசியம் என்று ஒரு மனதாய் ஏற்றுக் கொள்கிறோம். மனித உரிமைகளையும் சமுதாய முன்னேற்றத்தையும் பாதுகாத்து சமநிலை, சுயநிர்ணய உரிமை, தேசிய அரசு உரிமை அடிப்படையில் எல்லா உலக மக்களுக்கும் ஒரு திடமான, அமைதியான வாழ்க்கையை உத்திரவாதம் செய்யப் பாடுபடுவோம் என்று உறுதிகூறுகிறோம்.

படை பெருக்கப் போட்டி தொடர்ந்து நடக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த பயன்படக்கூடிய பெரும் பொருள் படைப் பெருக்கத்தில் வீணடிக்கப்படுகிறது.

போர் அமைதிப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அனைத்து நாட்டு மக்களும் முன்னைவிட அதிக அளவில் முக்கியமான பங்காற்றி வருவதை நாங்கள் அறிவோம். ஏகாதிபத்தியப்போரில் ஏற்கெனவே சிறந்த வெற்றிகள் பெறப்பட்டுள்ளன. எனினும் மேலும் முன் முயற்சிகள் தேவை. கண்டங்கள், மண்டலங்கள், நாடுகள் என்கிற மட்டங்களில் முன் முயற்சி தேவை. எல்லா வடிவங்களிலும் ஆக்கிரமிப்பையும், ஒடுக்கு முறையையும் எதிர்த்துப்



பேரவையின் நினைவாக வெளியிடப்பெற்ற
அஞ்சல் தலையும் அதற்குரிய உறையும்.

போராடுக என்று நல்லெண்ணங் கொண்ட அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம். நிலையான அமைதி சாத்தியம் என்று இந்தப் பேரவைமூலமாக உலகுக்குப் பிரகடனம் செய்கிறோம்."

இந்தியக் குழு உறுப்பினரும், இப்பேரவையின் செயலாளருமான ரமேஷ் சந்திரா நன்றிகூற பேரவைக் கூட்டம் இனிது முடிந்தது. பேரவையின் லெனின் சமாதானப் பரிசும் வழங்கப்பட்டது.

பேரவையின் நினைவாக ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு கைத்துண்டு வழங்கப்பட்டது. பேரவையின் ஞாபகார்த்தமாக தனி அஞ்சல் தலையும் அதற்குரிய உறையும் வெளியிட்டு ஜெர்மன் ஜனநாயக குடியரசு சிறப்பித்தது.

பேரவைகள் சந்தித்த பல உறுப்பினர்கள் தொடர்பு பற்றியும் அந்நகரின் முக்கிய சிறப்பு வாய்ந்த இடங்கள், செய்திகள் பற்றியும் இனிக் காண்போம்.

மகிழ்ச்சியான செய்தி

மாணிக்கக் கேள்வியின் முடிவு தேதி மாசித் திங்கள் 30-ஆம் நாளாக மாற்றப்பெற்றிருக்கிறது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்.

★

வை. சு. ச.

[அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாமலரைக்கண்டு பெருமகிழ்ச்சி கொண்ட ராஜா சண்முகம் அவர்கள் (பணிபுரியும் இடம், ருக்மணி நூற்பு ஆலை, சிலைமான், மதுரை) நாட்டுக்கும் மொழிக்கும் காந்திவழி நின்று பணிபுரிந்த காரைக்குடி வை. சு சண்முகம் செட்டியார் அவர்கள் பற்றிய செய்திகள் இடம் பெறாதது குறித்து வருந்தி எழுதிஉள்ளார்கள். அம்மட்டோ, சண்முகம் செட்டியார் பற்றிய சிறந்த செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவற்றை எல்லையற்ற பெருமையோடும் பெருமிதத்தோடும் வெளியிடுகின்றோம். —ஆசிரியர்.]

செட்டி நாட்டிற்கு அண்ணல் காந்தியடிகள், அன்னை கஸ்தூரியுடன் வந்திருந்த போது திரு வை. சு. சண்முகம் செட்டியார் இல்லத்திற்கு வந்து சிறப்பித்தார்கள். (இந்தச் செய்தி யங் இந்தியா இதழில் இடம் பெற்றுள்ளது)

காந்தியடிகள் செட்டிநாட்டு வருகையின் போது ஏலம் போட்ட துண்டை ரூ. 1001/-க்கு எடுத்து அண்ணலின் தூய பணிக்கு செட்டிநாட்டார் துணை நிற்பார்கள் என்பதை எடுத்துக் காட்டியவர்கள் திரு வை. சு. ச. அவர்கள்.

இந்நிகழ்ச்சி, 15·7·57ம் நாள் ஆனந்தவிகடனில் காந்தியக் கவிஞர் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் எழுதிய காந்தித் தாத்தா கதைகளிலும் 5-10 69ம் நாள் மேற்குறித்த இதழில் திரு. C. N. கிருஷ்ண பாரதி (காந்தி நூற்றாண்டு விழா ஏற்படுத்திய துணைக் குழுவின் கன்வீனர்) அவர்கள் எழுதிய "சென்னையில் ஒரு காந்தி இல்லம்" என்ற கட்டுரையிலும் இடம் பெற்றுள்ளது

அரசியல் விழிப்பற்ற அந்த நாளில் அந்நியத் துணிகளை ஒழிக்கும் திட்டத்தின் அடிப்படையாக தம் இல்லத்திலிருந்து கணக்கற்ற துணிகளை எடுத்துவந்து காரைக்குடி மகர் நோன்புப் பொட்டலில் (இந்நாள் காந்திசதுக்கம்) எரித்து அரசியல் விழிப்பினை ஏற்படுத்தியவர்கள்.

இராமநாதபுரம் மாவட்டக் காங்கிரசின் தலைவராகவும் அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் உறுப்பினராகவும் பணிபுரிந்தவர்கள்.

திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் குருகுலத்தைத் துவக்கிய காலத்தில் அதற்கு நிதிசேர்த்தவர்கள் திரு. வை. சு. ச. அவர்கள்

தான். அங்கு பிராமணர் பிராமணர் அல்லாதார் வேறுபாடு தோன்றி அது பிளவாக உருவான போது காந்தியடிகள் முயன்றும் பிளவு உறவாகாது போய் சுயமரியாதை இயக்கம் தோன்றவித்திட்டவர்களில் திரு. வை. சு. ச. அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் இவர்களுடைய நெருங்கிய நண்பர்கள். கவியோகி சுத்தானந்த பாரதியாரின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் பெருந்துணை புரிந்தவர்கள்.

காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்தினைத் தோற்றுவித்த ஒரு சிலரில் வை சு. ச. அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

நகரத்தார் நிலைபற்றி மனம் வருந்தி அந்நாளிலேயே சீர்திருத்தத்தினைக் கொண்டுவரப் பாடுபட்டவர்கள். தாம் பேசியவற்றைத் தம் வாழ்நாளில் செய்து காட்டியவர்கள். தொண்ணூற்ருறு ஊர் கூட்டத்தைக் கோவிலூரில் கூட்டி ஒற்றுமையினை அன்றே வலியுறுத்தியவர்கள்.

நகரத்தாருக்கு என தனியாகப் பத்திரிகை வேண்டும் என்று பலகாலம் திட்டமிட்டும் வந்தவர்கள். (இதுகுறித்து சோ. ம. லெ. அவர்களுடன் கூடக் கலந்து பேசியுள்ளார்கள்) அவர்களுடைய கனவு இன்று நனவாகி நகரத்தார் திங்கள் இதழ் மலர்ந்துள்ளது. அவர்கள் எண்ணங்கள் எல்லாம் செயலாக இவ்விதழ் துணை நிற்கும் என்று நம்புகிறேன்.

சோ. ராஜாசண்முகம்,
சிலைமான், மதுரை.

சென்னை-14 நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12, ராமானுசம் தெரு, சென்னை-17 தமிழ்நாடு. ஆசிரியர்: புலவர் நாகசண்முகம்.